# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901௵ ஏப்ரல்௴ 20௳ { புத்தகம். 9.

## மகாபாரதம்.

இந்தியா தேசத்தில் பழைய இதிகாசங்களாயுள்ளன மகாபாரதமும் இராமாயணமுமாம். இதிகாசமென்பது பழையதாகிய கதையைக்கூறுவது. அது தொல்காப்பியத்திற் கூறப்படும் தொன்மை என்பதனோடொக்கும். பழங்கதைமேற்செல்லும் இவ்விதிகாசம் இருவகைப்படும். ஒன்று தான்தோன்றிய காலந் தொட்டு எழுதப்படாமல் கர்ண பரம்பரையாய் வழங்கி வந்தது; மற்றொன்று முதலில் எழுதாக்கேள்வியாய்ப் பயின்று வந்து பிற்காலத்துப் புலவர்களால் இடையில் கூட்டியும் குறைத்தும் புதுக்கியும் திருத்தி யாக்கப்பட்டது. எப்போதும் எழுதாக் கேள்வியாயே வழங்கி வந்த இதிகாசங்கள் உலகத்தில் மிகச்சில, அவை பிறதேசங்களில் ஒன்றிரண்டு உளவேனும் இந்தியாவில் ஒன்றுதானும் உளதாய்க் காணப்படவில்லை. ஆகவே மகாபாரதம் மேற்கூறிய இரண்டாம் வகுப்பைச்சார்ந்த இதிகாசமாதல் வேண்டும். அது யாங்ஙனமென்பது முன்னர்க் கூறுமாற்றால் தெள்ளிதின் உணரப்படும்.

மகாபாரதத்திற் கூறப்படும் பெரிய யுத்தம் இற்றைக்கு மூவாயிரம் வருஷங்களுக்கு முன் நடந்ததாக எண்ணப்படுகின்றது. இவ் யுத்தம் நிகழ்ந்த சில வருஷங்களில் அதனைப்பற்றியும் அதில் விளக்கமடைந்து புகழ்படைத்த வீரர்களைப் பற்றியும் பாட்டுக்கள் இயற்றப்பட்டுச் சூதர் மாகதர் முதலிய புகழ்வோரால் ராஜ சபைகளிலும் மற்று மிடங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுக் கர்ண பரம்பரையாய் உலகத்தில் பயின்று வந்தன. அவைகளை

யெல்லாம் ஒருங்குசேர்த்துப் பிற்காலத்தில் கிருஷ்ண துவைபாயனர் என்னும் புலவர் ஒரு பேரிதிகாசமாக யாத்தனர். அவர் காலத்திலேயே பாரத யுத்தத்தைப் பற்றிய உண்மைச் சரிதங்களெல்லாம் மறைந்துபோய், உண்மை வீரர்களல்லரதோரே யுத்தத்தில் விளக்க முற்றவர்களாய்த்தோன்ற, தீயோர் அழிய நல்லோர் சிறப்படைதலாகிய அறநூற் கொள்கையை எடுத்துரைக்கும் செய்யுளாய் விட்டது மகாபாரதம். காளிதாசன் இரகுவமிசத்தை இயற்றினது போலாக, வான்மீகி இராமாயணத்தை இயற்றினது போலாக, கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை இயற்றினவரல்லர்; பாரத யுத்தத்தின்மேற் சென்ற பழைய சிற்றிதிகாசங்களை யெல்லாம் ஒருங்குதிரட்டி ஒரு பேரிதிகாசமாக யாத்தனர் என்க. வியாசரென்னும் அவருடைய காரணப்பெயரும் இதனையே தெரிக்கும்; அப்பதத்திற்குத் தொகுத்தோர் என்பது பொருளாகலின்.

இவ்விதமாகக் கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை யாத்தது இன்ன காலத்தில் என்று ஒரு தலையாகக் கூறுதலியலாது; இற்றைக்கு இரண்டாயிரத் தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னரே யாத்தனரென்றே சொல்லலாம். கிறிஸ்து பிறக்க ஐஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் புத்தமத முண்டாயிற்று. அப்படிப் புத்தமதந் தோன்றிய காலத்து வழங்கி வந்த ஆஸ்வலாயன சூத்திரத்தில் பாரதம் அல்லது மகாபாரதம் என்று ஒரு நூல் கூறப்பட்டுளது. ஆகவே அக்காலத்திற்கு முன்னரேயே பாரதக்கதைமேற் சென்ற சிறு செய்யுட்களெல்லாம் ஒருங்கு சேர்க்கப்பட்டு ஒரு நூலாக யாக்கப்பட்டு விட்டன வென்பது தெளியப்படும்.

இவ்வாறு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபடியே மகாபாரதம் இப்போது இருக்கவில்லை. காலஞ்செல்லச் செல்ல அது வளர்ந்து கொண்டே வந்து விட்டது. மகா பாரதத்தில் இப்போது தொண்ணூறாயிரம் சுலோகங்களுக்கு மேல் உள்ளன. அதற்கு ஓரனுபந்தமய் வழங்கும் அரிவமிசத்தையும் சேர்த்தால் சுலோகத்தின் தொகை லக்ஷத்திற்கு மேற்படும். இவற்றுள் இருபதினாயிரஞ் சுலோகமே பாரதக்கதையைக் கூறுகின்றன. ஆதலால் கிருஷ்ண

துவைபாயனரால் யாக்கப்பட்டபோது மகா பாரதத்தின் சுலோகத்தொகை இருபதினுயிர மளவென்றே கொள்ளவமையும். மகாபாரதத்தின் முகவுரையாகிய அநுக்கிரமணிகையில் உபாக்கியானங்கள் சேர்க்கப்படுமுன்னர் வியாசர் மகாபாரதத்தை இருபத்து நாலாயிரஞ் சுலோகங்களால் இயற்றினரென்றும் புலவோர்கள் அதனையே பாரதமென்று கொள்வார்களென்றும் கூறப்பட்டுளது. இக்கூற்று மேல் எடுத்துரைத்த கொள்கையை நன்கு வலியுறுத்துகின்றது. மகாபாரதம் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபின் பரத கண்டத்திற்றோன்றிய புலவர்களொவ்வொருவரும் அதனைச் சிறிது சிறிதாக வளர்த்துக்கொண்டே வந்தார்கள்; வடதேசத்திலுள்ள ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்கள் சரித்திரங்களும் அதனுட்கூறப்பட வேண்டுமென்று விரும்பினர்கள்; புதுமதங்களை ஸ்தாபிக்க வந்த ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் கொள்கைகளெல்லாம் அதனுள் எடுத்தாளப்பட வேண்டு மென்று கருதினர்கள். கற்றறிவில்லாத சனங்களுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு அறநூற்பனுவல்களும் நீதி நூற்பனுவல்களும் அதனோடு சேர்க்கப்பட்டன; சாதிதர்மங்களும் ஆசிரமதருமங்களும் அக்கருத்துடனேயே அதனோடு புணர்க்கப்பட்டன. இவ்விதமாகவே ஆதிகாலத்தில் இப்பாரதகண்டத்தில் வழங்கி வந்தனவான தேவர்களையும், முனிவர்களையும், அரசர்களையும் பற்றிய பலவித கதைகளும் அதனோடு கோக்கப்பட்டன, புத்தமதம் வீழ்ந்து கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொண்டாடுதலே பரத கண்டத்தில் பரவியபோது மகாபாரதமும் காலத்துக் கிணங்கக் கோலங்கொண்டு கிருஷ்ணனுக்குப் பரத்துவம் கூறும் நூலாய் மாறிற்று. இவ்வாறுகவே மகாபாரதம் காலம் வளர வளர்ந்துவந்து, தனது இதிகாசத்தன்மைகெட்டு, இப்போது சமயக் கொள்கைகளுக்கும் தர்மோபதேசங்களுக்கும் வெறுங் கட்டுக்கதைகட்கும் ஓரிருப்பிடமாய் இருக்கின்றது.

மகாபாரதம் இவ்வாறு அதிகமாக வளர்ந்ததன் பின் அதனை மேலும் வளர வொட்டாமல் தடுத்தற்காக இற்றைக்கு ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் ஒருபாயம் செய்யப்பட்டது. பர்வ சங்கிரகமென முகவுரை யொன்றியற்றி அதனுள் மகாபார

த்துட் கூறப்படும் விஷயங்களொவ்வொன்றையும் எடுத்துக்காட்டிப் பர்வங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள சுலோகங்கள் இத்தனையென்று கணக்கேற்படுத்தப்பட்டது. இந்தக் கணக்கின்படி மகாபாரதத்துச் சுலோகத்தொகை எண்பத்து நான்காயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து. இப்படிக் கணக்கேற்பட்டதன் பின்னும் மகாபாரதம் வளராமல் இருந்ததோவென்றால் இல்லை. காலாந்தரத்தில் புது விஷயங்களும் புதுச்சுலோகங்களும் இடையிடையே சேர்க்கப்பட்டு இப்போது அது தொண்ணூறாயிரம் சுலோகங்களுள்ளதாயிருக்கின்றது. இது மேற்கூறியபடி அரிவமிசம் என்னும் அநுபந்தத்தை நீக்கிக்கண்ட கணக்கென்றறிக.

இவ்விதமாகப் பழைய நூல்களின் இடை யிடையே புது விஷகளையும் புதுப்பாட்டுக்களையும் சேர்ப்பது சம்ஸ்கிருதத்தில் மாத்திரம் நிகழ்ந்ததன்று. அது தமிழ் நூல்களிலும் ஏறக்குறைய ஒவ்வொன்றிலும் காணப்படுகின்றது. சீவகசிந்தாமணியைத் திருத்தக்கதேவரியற்றியது இரண்டாயிரத் தெழுநூறு செய்யுட்களாலென்பது அதன் இறுதியிலுள்ள 'மூந்நீர் வலம்புரி' என்றற்றொடக்கத்து ஓம்படைச் செய்யுளால் தெரியவருகின்றது. அதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியார் கருத்து மிதுவே. இப்போது சீவக சிந்தாமணியில் மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து செய்யுட்களுள்ளன. ஆகவே மேற்கூறிய இரண்டாயிரத்தெழுநூறு மொழிய எஞ்சிய நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்களும் வேறு புலவர்களாற்பாடி இடையிடையே சேர்க்கப்பட்டனவென்பது கூறாமேயமையும். இவைகளெல்லாவற்றையும் கந்தியார் என்பார் செய்து சேர்த்தார் என்பது சிலர் கொள்கை. தென் தேசத்தில் தமிழ்ச் சைவர்களால் மிகவும் கொண்டாடப் படுவதாகிய பெரிய புராணத்தைச் சேக்கிழார் நாலாயிரத்து இருநூற்றைம்பத்து மூன்று விருத்தத்தாற் பாடினாரென்று கொற்றங்குடி உமாபதி சிவாசாரியாரால் தாமியற்றிய திருத்தொண்டர் புராணசாரத்தின் ஈற்றில் கூறப்பட்டுளது.. இப்போது பெரிய புராணத்தில் நாலாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்பது விருத்தங்களுக்குமேற் காணப்படுகின்றன. ஆகவே உமாபதிசிவாசாரியர் கூறிய கணக்கிற்கு மேலதிகமாயுள்ளநாற்பத்தாறு விருத்தங்களும் இடையிடையே வேறு புலவர்களால் பாடிச் சேர்க்கப்

பட்டிருத்தல் வேண்டும். இவைகளை வெள்ளி பாட்டென்றும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்காசிரியராகிய வெள்ளி யம்பலத்தம்பிரான் பாடிச் சேர்த்தாரென்றும் கூறுப. இவ் வெள் ளிபாட்டுக்கள் கம்பராமாயணத்தும் மூவர்களியற்றிய தேவாரத் திடத்தும் வேறு நூல்களிலும் காணப்படுகின்றன. இவ் வெள்ளி யம்பலத்தம்பிரான் போன்ற நாணிலிகளாகிய புலவர்களால் நம் சம்ஸ்கிருத தமிழ் நூல்கள் தம் சிறப்பும் மதிப்பும் கெட்டுக்கிடக் கின்றவற்றிற் களவில்லை.

மகாபாரதத்தின் பாகங்கள் ஒவ்வொன்றும் மேலே விளக் கியபடி வெவ்வேறு காலத்தில் இயற்றிச் சேர்க்கப் பட்டவை களா யிருத்தலின் அதனுட் கூறப்படும் ஒழுக்கங்களும் வழக் காறுகளும் இப்பரதகண்டத்தில் ஒரே காலத்தில் நிகழ்ந்து வந் தன வென்று கொள்ள முடியாது; அதுவுமன்றி இன்னபாகத் தில் கூறப்படும் ஒழுக்கங்கள் இன்னகாலத்தின வென்று கூறு தலும் இயலாது. இதனை ஆய்ந்தறிய வல்லரல்லாதார் மகா பாரதத்துட் கூறப்படும் ஒழுக்க வழக்கங்கள் யாவற்றையும் ஒரே காலத்தின வெனக்கொண்டு பேரிடர்ப் படுவரெனக. உதாரண மாக மகாபாரதத்தில் கிருஷ்ணனுக்குப் பரத்துவங் கூறப்படு வதனால் அது பாரதயுத்தம் நடந்தகாலத்திலாக, மகாபாரதந் தோன்றியகாலத்திலாக, பரதகண்டத்தில் நிகழ்ந்து விளங்கிற்றெ ன்று கொள்ளற்க; மகாபாரதம் கடைசியாய்த் தொகுக்கப்பட்ட போது நிலவிய தொன்றென்றேகொள்க. கிருஷ்ணனுக்குப் பரத் துவங் கற்பிக்கப்பட்டது புத்தமதம் பரதகண்டத்தில் நின்று நீங் கியபோதென்றே கொள்ளப்படுகின்றது. அது கிறிஸ்து பிறந்த நான்காம் நூற்றாண்டிலென்று சொல்லுப. இது போல்வன இன் னும் பலவுள. இவைகள் யாவும் வினாநிகழ விடமில்லாதவாறு ருசுப்பிக்கப் படவில்லை. அதனால் மகாபாரம் கடைசியாய்த் தொகுக்கப்பட்ட காலம் நான்காம் நூற்றாண்டென்றே ஒரு தலை யாகக் கொள்ளற் கிடமில்லை. இவ்வாறே மற்றக் கிரந்தங்களின் காலமும் இன்னும் ஒன்றேனும் செவ்வனே வரையறுக்கப்படா மல் இருக்கின்றது. இதற்குக் காரணம் அக்கிரந்தங்களில் அவை தோற்றியகாலம் சொல்லப்படாமையும் அவை காலந்தோறும் மா றுபா டடைந்தமையுமாம்.

உபாக்கியானங்கள் யாவற்றையும் நீக்கி விட்டால் மகாபாரதம் தமிழிலுள்ள வில்லிபுத்தூரர் பாரதத்தைப் பெரிதுமொக்கும். ஆகவே வில்லிபுத்தூரர் பாரதத்தைப் படிப்பதனால் ஒருவர் ஆதியில் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபோது மகாபாரதம் இவ்வாறிருந்ததென்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். வில்லிபுத்தூரர் பாரதம் தமிழ் நாட்டில் மிகவும் பயில வழங்குவதற்கும் நல்லாப்பிள்ளை பாரதம் பயில வழங்காமைக்கும் காரணம் முன்னது உபாக்கியானங்களால் கதைத்தொடர்ச்சி இடையீடு படாது யாற்றொழுக்குப்போல் சென்றினிது முடிதலும் மற்றது உபாக்கியானங்கள் மிக்குக் கதைத்தொடர்ச்சி யாண்டும் இடையீடு பட்டுக்கிடத்தலுமே போலும். உபாக்கியானங்கள் யாவற்றையும் கதைக்கு வேண்டாதனவென்று கொண்டு வில்லிபுத்தூரர் நீக்கிவிட்டது அவைகள் பிற்காலத்தனவென்பதே அவரது கொள்கை யென்பதைக் காட்டாது போகினும் அவரோர் மெய்ப்புலவரென்பதை நன்கு விளக்குகின்றது.

பரத கண்டத்திலும் மற்றத் தேயங்களிலும் ஆதியில் தோன்றிய வேதம் முதலிய பழைய நூல்கள் யாவும் எழுதாக் கேள்வியாயே நெடுங்காலம் பயின்று வந்தன. இதற்குக் காரணம் எழுத்து அக்காலத்தில் தோற்றாமையேயாம். பரத கண்டத்தில் எழுத்துத் தோற்றியது கிறிஸ்து பிறக்க ஐஞ்ஞூறு வருஷங்களுக்குமுன் என்பது பலபிரபல நியாயங்களால் நாட்டப்பட்டுள்ளது. ஆகவே ஆதியில் எழுதாக் கேள்வியாயிருந்த மகாபாரதம் தோன்றியது கிறிஸ்து பிறக்கப் பல நூறுவருஷங்களுக்குமுன் என்பது போதரும். கிருஷ்ண துவைபாயனர் பழைய இதிகாசங்களை ஒருங்கு சேர்த்து மகாபாரதத்தை யாத்த காலத்தில் கூட எழுத்துத் தோற்றவில்லை என்பதே பலருடைய கொள்கை. எழுத்தில்லாதபோது ஒரு நூல் எழுதப்படுவதும் இல்லை. மகாபாரதத்தைவியாசர் சொல்லக் கணேசர் எழுதினர் என்று அதன் முகவுரையிற் கூறியிருக்கின்றதே எனின் அது பிற்காலத்தாரால் இடையில் சேர்க்கப்பட்டதொன்றெனக. பல பிரதிகளில், முக்கியமாய்த் தென்தேசத்துப் பிரதிகளில், அது காணப்படாதிருத்தலினாலே அது இடையிற்றோன்றிய தொன்றென்பது நன்கு

விளங்கும். அது நூல்களைப் பட்டையிலும் ஓலையிலும் எழுதுதல் பெருவழக்காய் வந்ததன்பின் தோன்றி யிருத்தல் வேண்டும்.

பாரதயுத்தத்தை நடத்திய பாண்டவர் கௌரவர் என்னும் இருதிறத்தாருள் கௌரவர்களே ஒழுக்கமுள்ளவர்களென்றும் நியாயமும் அவர்கள் பக்கமே என்றும் அவர்களைத் தங்கள் வஞ்ச கத்தினால் பாண்டவர்கள் வென்றார்களென்றும் இவ்வாறாகிய உண்மைச்சரிதம் பின்பு புலவோர்களால் திரிக்கப்பட்டதென் றும் சிலர் கொள்வார்கள். இவர்கள் கொள்கை விரிக்கிற் பல்கும்.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

---

## ஸ்ரீராமாநுஜர் சரிதம்.

---

(301-ஆம்பக்கத் தொடர்ச்சி).

இவ்விளையாழ்வா ரிங்ஙனம் நான்காம் நிலையினை மேற்கொண்டு ஒழுகுஞ் செய்தி கேட்ட கந்தாடைமுதலியாண்டானும், ஆரிய குலதிலகரான திரு மறுமார்பனெனும் மறுபெயர் பூண்ட கூரத்தாழ்வானும் பெருமகிழ்ச்சி கொண்டு காஞ்சிமா நகரஞ்சேர்ந்து இளையாழ்வானது இணையடி வணங்கி 'அடியோமுக்குப் * பஞ்ச ஸம்ஸ்காரங்களை யருளல்வேண்டும்' என்று வேண்ட இராமாநுசரும் அவரது வேண்டுகோளைத் தலைக்கட்டியருளினார். இது நிற்க,

யாதவப்பிரகாசனும், தன் தாயின் கட்டளைப்படி உடையவரைச் சரண டைந் துய்யக்கருதித் தான் முன்பு ஒழுக்கந்தவறியதற்குப் பிராயச்சித்தமா கப் பூவலஞ் செய்ய வேண்டுமே! மூப்படைந்து உடல் மெலிந்தமையால் அங்ஙனஞ் செய்யதலரிதாகும்! எனக்கவலையுடன் கண்வளர்கையில், பேர ருளாளன் "நம் இராமாநுசனை ஒருதரஞ்சுற்றி வருவதே பூவலஞ் செய்வ தினும் மேலானது" என்று ஸ்வப்பனந் தந்தருளினார். யாதவப் பிரகாசன் அக்கனவின் உண்மை கொள்ளாது ஒன்று மறியான்போலத் திருக்கச்சி நம் பியுடன், 'யானொன்று நினைத்திருக்கின்றேன்; அதனைப் பேருளாளரி டம் விண்ணப்பஞ் செய்து அவர் திருவுள்ளமானபடியைச் சொல்லவேண் டும்' என்ன, நம்பியும் அவ்வாறே செய்யப்பேரருளாளர், கனவு தந்தபடி யையும் அதனை நம்பாமையையும் அருளிச்செய்தார். அப்பால் அவ் யாதவப் பிரகாசன் இராமாநுசனது அருள் நோக்கிற்கிலக்காய்ச் சின்னாள் கோ விந்தஜீயர் என்ற பெயருடன் இவ்விருள்தரு மாஞாலத்தே இன்பமுற்று

---

* தாபம் [ஸமாச்ரயணம்], திருமாள், தாஸ்யநாமம், மந்திரோப தேசம், யாகம் [பூசை] என்பன.

'யதிதர்மஸமுச்சயம்' எனு மோர் நூலினையியற்றிப் பின் பரமபத மடைந்தான்.

பின் இராமாநுஜனும் கச்சியில் கூரத்தாழ்வானுக்கும் முதலியாண்டானுக்கும் 'மீமாம்ஸை' என்னும் நூலினை அருளிச்செய்து கொண்டிருக்குங்காலத்து, ஸ்ரீ ஆளவந்தாருடைய சிஷ்யரனைவரும் கோயிலில் நம்பெருமாள் ஸந்நிதிக்கட் சென்று 'நம் இளையாழ்வாரை இங்ஙனே அழைப்பித்தருளவேண்டும்'எனப் பிரார்த்தித்து, அப்பால் திருவரங்கப் பெருமாளரையரையும் உடையவரை யெழுந்தருள்விக்குமாறு வேண்டியனுப்ப அரையரும் உடனே புறப்பட்டுப் பேரருளாளர் ஸந்நிதிக் கெழுந்தருளினர். இச்செய்திகேட்ட திருக்கச்சிநம்பியும் அவரை யெதிர்கொண்டு சென்று அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்ய அவரும் இவரை வணங்க இருவரும் ஒருவரையொருவர் குசலமுசாவி நிற்கையில் அரையரும் நம்பியுடன் 'அருளாளனைச் சேவிக்கவேண்டும்' என்று கூற, நம்பியும் அவ்வாறே அழைத்துச்சென்றார்; அரையரும் பேரருளாளனது குழலழகிலும் வாயழகிலும் கண்ணழகிலும் ஈடுபட்டு அடிமுதல் முடியீறுகச் சேவித்து நிற்கப் பெருமாளும் பேரவுவந்து தீர்த்தம் முதலிய தந்து தமது பரிவாரங்களையுமனுப்பினர். அரையர் அவற்றிற் சிறிதும் பற்றிலரராய் 'யான் வேண்டுவது உடையவரையேயன்றி மற்றிவற்றை யன்று' என்ன அருளாளனும் 'தந்தோம்' என்றருளினர். அப்பால் உடையவர் அரையருடன்,

"வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ் சோலை
கொண்டல் மீதணவுஞ்சோலை குயிலினங் கூவுஞ்சோலை
அண்டர்கோ னமருஞ்சோலை"

பொருந்தப் பெற்றதும், அந்தணர் துறைபடிந்து மூழ்குகையில் நீர் துளும்பப் புஷ்பங்களிலுள்ள தேன் சொரியத்தக்க நீர்வளமுடையதும், செந்தாமரை முகத்தினழகையும், கருங்குவளை கண்ணினழகையும் காட்டுங் கவின் பெற்றதும், சந்தனமரங்களைப் பெரியவரையினின்று ஈர்த்துச் செல்லும் காவிரி நன்னதி யாயப்பெற்றதும், இரவிற் சிறைவண்டினங்கள் எம்பெருமான் குணம்பாடி மல்லிகையாகிய வெண் சங்குகளை யூதும் தன்மையுடையதும், அன்னங்கள் செந்தாமரைமலரிற் சென்றூசலாடி அம்மலர்களிலுள்ள மகரந்தப்பொடி யாடி விளையாடும் வளம் வாய்ந்ததும், ஓர் மணி வரையில் இளஞாயிறெழுந்தாற்போல அரவணையிற் றுயில்கொள்ளும் அநந்த னமர்ந்தருளப்பெற்றதுமான திருவரங்கம் பெரிய கோயிலை நோக்கிச்சென்றார். இங்ஙனஞ்சென்ற உடையவரை ஆங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் எதிர்கொண்டழைத்துச் சென்று நம்மாழ்வார், ஸ்ரீரங்கநாயகியார் முதலோரையும், அப்பால் படம்கொண்ட பாம்பணையிற் பள்ளிகொண்ட பரமனையும், கடல்விளங்கு கருமேனியம்மானுமான அழகிய மணவாளனையும் தருசிப்பித்தனர்.

அப்பொழுது பெரிய பெருமாள் நம் இராமாநுசனை நோக்கி, * ‘உபய விபூதியையும் நமக்கே தந்தோம்; நீர் இங்ஙனே வீற்றிருக்கக் கடவீர்’ என்று நியமித்தருளினர். அதுகேட்ட இராமாநுசர், பெரிய நம்பியை நோக்கிப், “பெரியார்க்காட்பட்டக்காற் பெறுத பயன் பெறுமாறு” என்றபடி ‘நும் திருவடிக் காட்பட்டமையா லன்றோ இப்படிப் பெருமாள் அருளியது’ எனவுரைத்துப் பின் அக்கோயிலிலுள்ள குறைகளனைத்தையும் நிறைவேற்றி நித்தியோற்சவம் முதலியவற்றையும் நடத்திவருவாராயினர். இப்படியிருக்கையில், சைவசமயத்திற் புக்கிருந்த உள்ளங்கை கொணர்ந்த நயினரை வைணவ ராக்குகைக்குத் திருமலைநம்பி பாற்சென்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் பெருங்களிப்புடன் மீண்டு வந்து இராமாநுசனடி வணங்கி நிற்க, இராமாநுசனும், ‘நீர் சென்ற செய்தியாதாயிற்று’ என்ன, அவர்களும், “யாம் திருமலை நம்பியுடன் காளஹஸ்திக்குச் சென்று ஆங்கோர் குளக்கரையிலுள்ள மரத்தடியில் தங்கி யிருந்தோம், ஆங்கே நயினரும் சிவபிரானுக்கு அபிஷேகஞ் செய்தற்பொருட்டுக் குடமெடுத்து வந்தார். அது கண்ட திருமலை நம்பி அந்நயினரை நோக்கிக் “கொன்றைச் சடை முடியானைக் குளிர நீராட்டினால் என்னுனக் குண்டாம் பயன்” என்ன, இதனை அவர் காதிற் கொள்ளாமல் தமது காரியத்திலேயே கண்ணாகச் சென்றார்.

பின்பொருகால் முன்போல அங்குநயினர் வர அவர் வரும்வழியில், “திருமாலே பரம்பொருள்” எனுங் கருத்துகொண்ட ஒரு சுலோகத்தை ஒரு சீட்டிலெழுதி யெறிந்துவிட நயினர் அதனைக் கையிலெடுத்து நம்பியிடம் குறுக அவ்விருவருக்கும் அதுகாரணமாக † வாதமுண்டாயிற்று. அது வருமாறு:—

க. நயினர்.—(கீழேவீழ்ந்த சீட்டை யெடுத்து) ‘உங்கள் கையில் நின்றும் நழுவிய பொருள் இதுவோ’? என்றார். ⁂.

திருமலை நம்பி.—‘பிறருடைய பொருள் நழுவுமேயன்றி எமது பொருள் நழுவாது’ என்றார். ‡.

உ. நயினர்.—‘நீங்கள் எல்லீரும் ஏன் ஓரிடத்தே நடப்பது’? என்றார். †.

திருமலை நம்பி.—‘மார்க்கம் கலக்கமற்றிருக்கையாலே’ என்றார். ††.

---

* நித்திய விபூதி [வைகுண்டம்], லீலாவிபூதி [இப்பூலோகம்] என்பன.

† இவ்வாதத்தில், கேள்வியும் ஸமாதானமும் சிலேஷையாய்ப்பல பொருள் பயக்குமாறு காண்க.

⁂ இதன்பொருள்.—‘உங்கள் தெய்வமான திருமால் நித்தியன் அன்று’ என்பது.

‡ ” ‘பிற தெய்வங்கள் அநித்தியமேயன்றி எமது தெய்வமான திருமால் நித்தியனே’ என்பது.

† ” ‘நீங்கள் எல்லீரும் விஷ்ணுவையே பரதெய்வமாகக் கொண்டிருப்பது என்?’ என்பது.

†† ” ‘இம்மதத்தில் அபாயம் சிறிதுமில்லை யாதலின்’ என்பது.

௩. நயினர்.—'கேவலருக்கு மார்க்கம் உண்டோ'? என்றார். ‡‡.

திருமலை நம்பி.—'கையில் பொருள் கொண்டு செல்பவருக்கு இவ்வழியே தக்கது' என்றார். **.

௪. நயினர்.—'ஆனால், நீங்கள் உற்றாரைவிட வந்தீர்களோ'! என்றார். §.

திருமலை நம்பி.—'கறவைகள் கொள்ள வந்தோம்' என்றார். [கறவைகள் - பசுக்கள்.] §§.

௫. நயினர்.—'உண்மையே! பசுக்களின் பாத தூளிகள் நல்லொழுக்கமுடைய பெரியார்க்கு வேண்டுவதே'! என்றார். ‖

திருமலை நம்பி.—'அது இடமறிந்து நேர்படில் நல்லது' என்றார். *

௬. நயினர்.—'இப்படியே நீங்கள் சொல்வது புதுவார்த்தை' என்றார்.

திருமலை நம்பி.—'இது பழைய வார்த்தையே' என்றார்; என்றால், முன்னே கூறி வந்ததும் இப்படியே என்பது.

அப்பால் நயினர் பேசத்திறனற்றவராய் நம்பிபக்கல் மிக்க பக்தி கொள்ள நம்பியும் அவரைப் பெரிதும் கடைக்கணித் தருளினார். மற்றொரு நாள் அம்மரத்தடியிலே நம்பி தமது சிஷ்யர்கட்குத் திருவாய்மொழியில் "திண்ணன் வீடு" என்ற பதிகத்திற்கு அர்த்தம் அருளிச் செய்யாநிற்க, நயினரும் அங்குப் பூப்பறித்தலைத் தவிர்த்து அவ்வர்த்த விசேடங்களைக் கேட்டிருந்தார். பின் நாலாம் பாட்டில் "எம்பெருமானுக் கல்லாற்

---

‡‡ ,, 'எல்லாம் கடவுளுக்கே உரியன என்றிருப்பவர்க்கு எந்த வழியாகில் என்'? என்பது. [இங்குக் கேவலர் - தமக்குள் தாம் ஆனந்தப்படும் (ஆத்மாநுவம் பண்ணும்) சிலரன்று.]

** ,, திருமாலை தெய்வமாகக் கொண்டவர்க்கு இவ்வைஷ்ணவ மதமே தக்கது என்பது.

§ ,, அப்படியாகில், நீங்கள் சிவஸ்தலமாகிய இங்கு வந்தது உமக்குரிய திருமாலைவிடவோ? என்பது.

§§ ,, [இனி, உமது உற்றாராகிய எம்போல்வாரை விடவோ? என்பதுமாம்.] 'அறிவில்லாதாரை நல்வழிப்படுத்த' என்பது.

‖ இதன் பொருள்.—நயினர் அந்த வாக்கியத்திற்கு வேறு பொருள் கொள்ளாமல் கிரமமாகக்கொண்டார். 'பசு' என்றதற்கு, நந்தி (இருஷபம்) எனக்கொண்டு அதன் பாததூளி பெரியார்க்கு வேண்டுவதே! என்றார். என்பதுமாம். [இன்னும், பசுபாததூளி-விபூதியுமாம்]

* ,, 'அதுவும் தக்க இடத்தி லிருக்குமாயின்' என்பது அஃதாவது, இவரது கருத்து விபூதியாகிலும் நேராக இடப்பட்டு அமையுமாயின் நலம் என்பதாகும்.

பூசும் பூசனையும் தகுமோ ?" என்ற தொருவாக்கியத்தைக் கேட்ட அக்க கணமே நம்பி திருவடிகளிலே அடைவு கெட வீழ்ந்து வணங்கி நின்றார். இதனையறிந்த மற்றைச் சைவர் யாவரும் நம்பியை நோக்கி 'நீர் இங்ஙனம் நம்நயினரை மயக்கிக்கொள்ளல் அடுக்குமோ ?' என்ன, அவரும் யாம் மயக்கிய விதத்தை அவரையே கேட்பீராக' என்றனர். பின்பு அவர்கள் நயினரை 'வாரும்' எனக்கைப்பிடித் தழைக்க அவரும் கையையுதறி 'நுமக்கும் எமக்கும் பிணையில்லை' என்று முகந்திருப்பிக் கொண்டார். அதற்கப்பால், அச்சைவர் 'எமது பிரான் துணைவருவானென்று நம்முடன் போர்செய்ய எண்ணிவந்தோம், அவன் எங்கள்கனவில் "யமுனைத்துறை வர், இளையாழ்வார், கோவிந்தப்பட்டர் [உள்ளங்கைக் கொணர்ந்த நயினர்] ஆகிய இவர் பகவத் அம்சபூதர்களாய் நாஸ்திகர்களைத்தொலைத்து உலகத்தை வாழ்விக்க அவதரித்தார்கள். அவருள், இக்கோவிந்த பட்டருக்குக் காசியில் வாசஞ்செய்யவேண்டு மென்ற கருத்திருந்தமையால், அவ்வெண்ணத் தையொழிக்கைக்காக நாமே உள்ளங்கைக் கொணர்ந்த நயினர் எனப்பெய ரிட்டழைத்ததே யொழிய வேறில்லை" என்றான்' எனக்கூறி மீண்டு சென்றார் கள். பின்பு, நயினரும் நம்பியுடன் திருமலை அடைந்து ஆசார்ய பக்தியு டன் வீற்றிருப்பாராயினர்" என்பது கேட்ட நம் இராமாநுசர் அந்த வைண வரைப் பெரிதுமுவந்தருளினர்,

பிறகு சின்னாட் கழித்துப்பின்னல், இராமாநுசன் பெரியநம்பி திரு மாளிகைக்குச் சென்று 'தேவரீர் ஆளவந்தாரிடம் கேட்ட அர்த்த விசே டங்களனைத்தையும் அடியேனுக் கருளவேண்டும்' என்ன, அவரும் அங்ங னமே செய்தபின், 'இன்னும் சிற்சில பொருள் விசேடங்களுண்டு அவற்றைத் திருக்கோட்டியூர் நம்பியாரிடம் சென்று கேட்பீராக' என்றனர். அது கே ட்ட இராமாநுசன் உடனே திருக்கோட்டியூர் சென்று நம்பியின் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கித் தமது வேண்டுகோளைத் தலைக்கட்டியரு ளுமாறு வேண்டலும் அவர் முகங்கொடாமலிருக்க, இராமாநுசன் மீண்டும் திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளினர்.

பின்னர், மீட்டும் மீட்டும் பதினெட்டுத்தரம் அந்த நம்பியிடஞ்சென்றும் அவர் பேசாதிருக்கக்கண்டு பெருந்துயருடையராய் நம்பெருமாளிடம் நட ந்தசெய்தி யனைத்தையும் கூறித் தம் இணைமலர்க்கண்ணீர்ததும்பிநிற்க அப் பெருமான், அப்பொழுது திருக்கோட்டியூர்நம்பியின் சிஷ்யரொருவர் கோ யிலுக்குவந்து மீண்டு செல்லுங்கால் அர்ச்சகர் முகமாய் "நம் இராமாநுச னது வேண்டுகோளைத் தலைக்கட்டுமாறு நுமது ஆசிரியர்க்குச் சொல்லக்கட வீர்" என்றருளினன். இஃதறிந்த நம்பியும் இராமாநுசனது பெருமைக்கும் ஊக்கத்திற்கும் வியந்து அர்த்தம் அருளிச்செய்யக்கருதி இளையாழ்வாரைத் தண்டும் பவித்திரமுமாக வருமாறு கட்டளையிட் டனுப்பினர். இளையாழ் வார், கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் உடனழைத்துவர, நம்பி

உடையவனா நோக்கி 'நம்மைத் தனித்துவரக் கட்டளையிட்டிருக்க நீர் இவ்விருவரையும் அழைத்துவந்ததென்?' என்ன, அவரும் 'தேவர் நியமனப்படி தண்டும் பவித்திரமுமாக வந்தேன்' என்றனர். அதுகேட்ட நம்பி, 'ஆகில் இவருள் தண்டுயார்? பவித்திரம் யார்?' என, கூரத்தாழ் வானை நோக்கி 'இவர் தண்டு' எனவும், முதலியாண்டானை நோக்கி 'இவர் பவித்திரம்' எனவும் கூறினர். பின்பு, நம்பியும் 'நீர் இப்பொருள் விசேடத்தை எவர்க்கும் அறிவியா திருப்பீராக' என்றோதி "நலந்தருஞ் சொல்" என்ற மந்திரத்தை யருள இராமாநுசன் ஆசிரியருடைய உத்திரவைமீறி அதனை ஆங்குள்ளார் பலர்க்கும் அருளிச் செய்வாராயினர்.

தி. கோ. ஸ்ரீரங்காசாரியர்.

---

## பாரத ஸாரம்.*

(216-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

### IV. அத்தியாயம்.

(சபா பருவம்)

(பாண்டவர்களுக்கு நேரிட்ட தீங்குகள்.)

இந்த அத்தியாயத்தின்கண் இரண்டாம் பருவமாகிய சபாபருவத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களை யெடுத்துச் சுருக்கிச் சொல்லப்படும்.

பாண்டவர்களுடையதாய பாகத்தை முன்னிட்டுக்கூடிய மூன்று சபைகளில் நடந்த வர்த்தமானங்களைக் குறித்துக் கூறியிருப்பதனால் இப்பருவத்திற்குச் **சபாபருவம்** என்னும் பெயர் ஏற்பட்டுளது.

மேலத்தியாயத்தில், காண்டவ வனம் எரியுண்டு அழிந்த காலத்து அர்ச்சுனனுதவியினால் **மயன்** என்னும் தானவனொருவன் உயிர் தப்பி வெளிப்போந்தானென்று கூறப்பட்டிருக்கிற தல்லவா? அந்தத்தானவன் அர்ச்சுனனிடம் போந்து தன்னுயிர் தந்ததற்காகத் தான் யாதேனும் ஓர் பிரதி யுபகாரம் செய்ய விரும்பியிருக்கிறதாகத் தெரிவித்தலும் அர்ச்சுனன் தான் அதை ஏற்றுக்கொள்ளேனென்று சொல்ல, அவன் மிகவுமிரங்கிக் கேட்டுக்கொண்டதின்பேரில் தன்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு அவன் விரும்பியதைச் செய்யலாம் என்று சொன்னான். அவன் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் சென்று இதைத் தெரிவித்தவளவில் அவர் யுதிஷ்டிரருக்கு ஒரு மாளிக்கைக் கட்டித்தரும்படி சொன்னார். மயன் அதிக ஆனந்தத்துடன் இதைச்செவி

* Adapted from Mrs. ANNIE BESANT'S MAHABHARATA.

யுற்று நவரத்ன கசிதமான ஒரு மாளிகைகட்டுவதற்குத் தகுந்த ஓரிடத்தைக்கண்டு குறிக்கும் பொருட்டு ஊருக்குத் திரும்பிப்போனான்.*

பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன் நகருக்குப் போய்விட்டார். அவர் மகா விஷ்ணுவி னவதாரமா யிருந்தபோதிலும், வயதில் தனக்குப் பெரியவர்களா யிருந்தவர்களிடத்தில் தான் எவ்வளவு விநயமாய் நடந்து வந்தாரென்பதைக் கேட்பவர்களெல்லாம் தாங்களு மப்படியே நடத்தல் நலமென்று கொள்ளவேண்டு மல்லவா? தான் போம்போது பிராமணர்களுக்கும் யுதிஷ்டிரருக்கும் பீமனுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவர்களுடைய வுத்திரவுபெற்றுப் போனதாகவும் பிராமணர்களிடத்தில் தான் அதிக அன்புவகித்தாரெனவும் கூறப்பட்டிருக்கிறது.

மயன் தான் முன்னொரு காலத்தில் விந்து வென்னும் ஏரிக்கரையில் தானவர்கள் செய்த யாகத்தில் எஞ்சிநின்ற நவரத்னங்களைச் சேர்த்து வைத்திருப்பதாகவும், தானவ அரசனுடைய கதாயுதம் ஒன்றும், வருணனுடைய தேவதத்த மென்னுஞ் சங்கொன்று மிருக்கிறதாகவும் பாண்டவர்களுக்குத் தெரிவித்து, தானவ்விடஞ்சென்று அவைகளைக்கொணர்ந்து கதாயுதத்தைப் பீமனுக்கும் தேவதத்தமென்னுஞ் சங்கை அர்ச்சுனனுக்கும் தந்து, நவரத்தினங்களை மாளிகைக் கட்டுவதற்கும் வைத்துக்கொண்டான்.

மாளிகையின் சுவர்களோ சுவர்ணத்தினாலாயது. ஆடகம், கிளிச்சிறை, சாம்பூனதம், சாதரூபம் என்னும் நால்வகைப் பொன்னினாலும் பற்பல மண்டபத்திலுள்ள தூண்களும் கம்பங்களும் செய்யப்பட்டு, கோமேதக நீல பவள புஷ்பராக மரகத மாணிக்க முத்து வைடூரிய வைரம் என்னும் நவரத்தினங்களால் இழைக்கப்பெற்றது. நடுவில் ஒரு குளம் அமைக்கப்பெற்றிருந்தது. அதன் கரையும் படிகளும் சலவைக்கல்லாலாயின. அக்குளக்கரையில் பற்பல விதமான வாசனை வீசும் மரங்களை வைத்து, குளத்தில் அம்சங்களும் மற்ற நீர்வாழ் பறவைகளும் விடப்பட்டிருந்தன. பதினான்கு மாதத்திற்குள் தமக்கோ ரொப்புமுயர்வும் வேறொன்றுமில்லை யென்பதான அவ்வரண்மனை கட்டி முடிக்கப்பட்டது. கிருகப் பிரவேச சடங்கு நிறைவேற்றும் பொருட்டு ஓர் தினமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பற்பல நாடுகளிலிருந்து இராஜராஜாக்களும், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலியவர்களும் வந்திருந்தார்கள்; இவர்களெல்லோரும் அங்கே ஒருங்கு கூடினர். இதுதான் சபாபருவத்திற் கூறப்பட்டுள்ள முதற் சபை, அதற்கு முனிபுங்கவராகிய நாரதமாமுனிவரும் எழுந்தருளியிருந்தார். அவர் வந்தவுடனே, ஐவரில் முதியோராகிய தருமர் தம் தம்பிமாருடன் எழுந்து அவர்க்கு வந்தனை வழிபாடுசெய்து யோக க்ஷேமங்களைக் குறித்து பேசிய பிறகு முனிவர் தருமரை நோக்கி அநேக கேள்விகள் கேட்டார். இந்து சாஸ்திரப்

* வியாசபாரதம், சபாபருவம். § 1

பிரகாரம் அரசன் பிரஜைகளுக்கெல்லாம் அதிபதி. விஷ்ணுவின் அம்சமென்று சொல்லப்படுவன். அவனுடைய கடமைகளோ எண்ணிறந்தன. அவன் நல்லவனுயிருந்தால் அவன் குடிகளும் க்ஷேமமடைவார்கள். மாந்தர் செய்வது மன்னவனைச் சேரும். அரசன் இன்னின்னபடி நடத்தல்வேண்டுமென்று பீஷ்மரும் விரிவாய் சொல்லியிருக்கிறார். அவைமேலே கூறப்படும். நாரதர் தருமரை அருகிலழைத்து உட்காரவைத்துக்கொண்டு "அப்பா தர்மா! உன்காலத்தைத் தினந்தோறும் தர்மார்த்த காம மோக்ஷ சம்பாத்தியத்தின் பொருட்டுச் செலவுசெய்துகொண்டு வருகிறாயா? உன்னிடம் துன்மந்திரிகளாயில்லாமல் நற்குணம் நற்புத்தி வாய்ந்த மந்திரிகளை வைத்திருக்கிறாயா? உன்னுடைய சைனியங்களுக்கு மாதந்தோறும் சம்பளம் சரியாய்ச் சேர்ந்துகொண்டுவருகிறதா? உனக்காக பற்பல யுத்தங்களில் உயிரைத்தந்த ராணுவ வீரர்களின் சம்சாரங்களை ஆதரித்து வருகின்றாயா? யுத்தத்தில் வென்ற மாற்றாரை ரக்ஷித்து வருகின்றாயா? எல்லாரும் உன்னை யெளிதில் வந்து பார்த்தல் கூடுமா? அவர்கள் உன்னைத் தங்கள் தந்தைபோல் பாவித்து உன்னை அணுகும்படி வைத்திருக்கின்றாயா? உன் வரும்படியில் எவ்வளவு கூறு செலவுசெய்கிறாய். வேளாளர்கள் எல்லாம் சுகமாயிருக்கிறார்களா? மழைநீரில்லாமற்போனால் உன்னாடு வளம் குறைந்துபோமாகையால், பற்பல விடங்களிலும் ஏரிகளும் குளங்களும் ஏற்படுத்திவைத்திருக்கின்றனையா? விவசாயிகள் சுகமாயிருக்கிறார்களா? அவர்களுக்குவேண்டிய வித்து முதலியவைகளைச்சேகரித்துத் தந்து வருகின்றனையா? சுயநலம் பாராட்டியேனும், அகங்காரத்தானும் அநீதி நடந்து கொண்டு வருகிறதோ! உன் மந்திரிகள் இலஞ்சம் வாங்காதிருக்கிறார்களா? வரிகளும் அந்நியாயமாய்ப் போடாதிருக்கிறார்களா? குருடர்களையும், முடவர்களையும் ஊமைகளையும், அங்கவீனர்களையும், சிநேகிதரற்றவர்களையும், சந்யாசிகளையும், தகப்பன் பிள்ளையைப் பாதுகாப்பதுபோல் காப்பாற்றி வருகின்றனையா? அரசே! அறுவகைத் தோஷங்களையும் அகற்றினுயா. அவை, தூக்கம்,சோம்பல், பயம், கோபம், அதைர்யம், தாமசம், என்பனவாம்." இவற்றையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த தர்மர் நாரதரை வணங்கி இனி இவற்றில் அதிக கவனம் வைப்பதாகச் சொன்னார். நாரதர் அதற்குப் பிறகு அச்சபையிலுள்ளோருக்குத் தேவலோகத்திலுள்ள அரண்மனைகளுடைய விசேஷங்களை எடுத்துச்சொல்லினர். *

நாரதர் அப்போது சொன்னவற்றிலிருந்து அரிச்சந்திரனென்னு மரசன் மாத்திரந்தான் இந்திரனோடு அவன் மாளிகையிலேயே இருப்பதாகத் தெரிய வந்தது. தர்மர் அவ்வரசனுடைய குணவிசேஷத்தைக் குறித்து வினவினார். தன்னுடைய தகப்பனார் நிலைமையைப்பற்றியும் விசாரித்தார். அதற்கு நாரதர் "அப்பா தர்மா, அரிச்சந்திரமகாராஜா இராஜசூய யாகஞ்செய்ததி

* வியாசபாரதம், சபா பருவம் § 5-11.

ஞல் அப்பதவியை அடைந்தார். உன் தகப்பனுரும் உன்னை உலகத்தை ஜெயித்து இராஜசூய யாகத்தைச் செய்து தனக்கும் பிரயோசனம் உண்டுபண்ணும் படிசொன்னுர்'' என்ருர். இவற்றைத் தான் தருமருக்குத்தெரிவித்து இராஜசூய யாகத்தினருமையையும் குறிப்பித்துப்போனுர். அந்த யாகத்தின் முடிவில், யாககர்த்தாவை சக்கிரவர்த்தியாகவிளப்பரஞ் செய்வார்கள். அந்த தேசத்து அரசர்களெல்லாம் அவரை அரசர்க்கரசாக மதித்தல்வேண்டும். குணத்திலும் பராக்கிரமத்திலும் பெரியவனுயிருந்தால் தான் அவனை மதித்து அவனைத்தங்களுக்குத்தலைவராகக் கொள்வார்கள். யுதிஷ்டிரர் தன்னையும் தன் மந்திரிகளையும் தான் அத்தகைய யாகம் செய்வதற்கு யோக்கியன் தானுவென்று கேட்டார். அப்போது அவர் நாடு இருந்த நிலைமையே அவர் பற்பல நற்குணம் வாய்ந்த அரசரென்பதற்குச் சாக்ஷியாக விருந்தது. அவர் குடிகளிடத்தன்பு பூண்டு வித்திபாசம் பாராட்டாது எல்லாருடைய நன்மையையுங் கோரி பாடுபட்டு வந்தார். அவருக்குச்சத்துரு வென்பா ஞெருவனில்லாதபடியால் அவருக்கு ஜனங்கள் அஜாதசத்ரு எனப்பெயரிட்டார்கள். ஒவ்வொருவரையும் தன் குடும்பத்திலொருவராகப் பாவித்து நடத்திவந்தார். தன்னுடைய சகோதரர்கள் பலவிதத்திலும் உதவி புரிந்து வந்தார்கள். இராஜ்ய முழுதும் சண்டை சச்சரவின்றி யிருந்தது. ஜனங்கள் தத்தமக்குரிய தொழிலில் கவனம்வைத்து விருத்திசெய்ய ஆரம்பித்தார்கள். மாதம் மும்மாரி பெய்து எல்லாம் சுபிக்ஷமாயிருந்தது. வாய்மையே துணை கொண்ட யுதிஷ்டிரர் காலத்து, சத்துருபயம், வியாதிபயம், அகாலமிருத்யு, சூன்யம் முதலியன ஒன்றேனுங்கிடையாது, பற்பல நற்குணம் வாய்ந்த இந்த அரசனைப்பார்த்து மந்திரிகள் “ அரசே! உங்களைப் பார்க்கிலும் இதனைச்செய்ய யோக்கியதை யுடையவர் வேறெவரிருக்கிருர்கள்” என்ருர்கள். இவர்கள் இப்படிச் சொன்னபோதிலும், தான் அதை உடனே அங்கிகரிக்கவில்லை. இதைப் பற்றித் தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தார். “காரியத்தைத் தீர்க்காலோசித்து செய்தல் வேண்டும். நம்முடைய வரவு யாகத்துக்குரிய செலவிற்குப்போதுமா? மற்ற யோக்கியதை நமக்கிருப்பது எப்படி நிச்சயம் ?'' என்று நன்ருய்த்தெளியும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தன்னிடம் வரும்படித் தெரிவித்தார். அவரைப்பார்க்கினும் யோசனை சொல்லக்கூடியவர் யாவரிருக்கிருர்கள் !

ஸ்ரீ கிருஷ்ணபகவானும் தூதுவன் வந்து சொன்ன மாத்திரத்தில் புறப்பட்டு வந்து சேர்ந்தார். தர்மர் அஸ்வமேதயாகம் செய்வதற்குக் கருதியதைக்கேட்டு, “ ஐய! அதற்கு இடையூறு ஒன்றுளது. நீவிரோ யாகத்தைச் செய்வதற்கு யோக்கியதை யுடையவர். எல்லா அரசர்களும் உம்மைச் சக்கிரவர்த்தியாக அங்கிகரித்தால்தான் நீர் இந்த யாகத்தை ஆரம்பிக்கலாம். புஜபல பாரக்கிரமம் பொருந்திய ஜாரசந்தன் என்னுமொரு அரசனிருக்கிருன். அவன் உன்னைத் தனக்குத்தலைவனுக அங்கீ

கரிக்க மாட்டான். அவன் பார்க்கப் பயங்கரமானதோர் நரபலி இடவெண்ணியிருக்கின்றான். அதற்கு நூறு நரர்கள் வேண்டும். அவர்களும் அரசர்களாயிருத்தல் வேண்டும். இதற்காக அவன் எண்பத்தாறு அரசர்களை இது வரையில் வெற்றிகொண்டு சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கிறான். இன்னும் பதினான்குபேர்கள் தான் வேண்டும். ஜராசந்தனை இதை நிறைவேற்றாமற் றடுப்பவன் தான் அதிக கீர்த்திபடைவான். ஆகையால் யாகத்தைப் பற்றி நினைப்பதற்குமுன் ஜராசந்தனைச் செயிக்கவேண்டும். சராசந்தனுக்கோ அளவற்ற சேனைகளிருக்கின்றன. ஆகையால் அவனைப் படைகொண்டு வெல்வது அருமை. தந்திரத்தால் தான் வெல்லல் வேண்டும்" என்றான். ஸ்ரீ கிருஷ்ணபகவானும், பீமனும் அர்சுனனும் அவனிடம் போக வேண்டியதென்று ஏற்பட்டது. கண்ணனுக்கு அதிக சமயோசிதமான யுக்திகள் தெரியும். பீமனிடத்திலோ அதிகபல முண்டு. அருச்சுனன் பேரைச் சொன்னாலும் அதிர்ஷ்டம் உடனே வரும். யுதிஷ்டிரர் தம் தம்பிகளுக்கு வரும் தீங்கைக்குறித்துச் சற்றே யோசித்தார். அப்போது ஸ்ரீ கிருஷ்ணபகவான் தருமரைநோக்கி "நீவிர் என்னுடைய எண்ணத்தையறிந்தாலும், என்னிடத்தில் உமக்கு நம்பிக்கையிருந்தாலும் உடனே பீமனையும் அர்ச்சுனனையும் என்னுடன் அனுப்புவீராக." என்று சொன்னமாத்திரத்தில் யாதேனும் தடையின்றி தம்பியர்க்குப் புத்திமதி சொல்லியனுப்புவித்தார். மூவரும் *ஸ்நாதக பிராமணர்களைப் போன்றுடுத்து ஜராசந்தன் ராஜதானியாகிய மகதத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் அந்நகர் சேர்ந்ததும் அவ்வூரார் பூஜிக்குமோர் மலைச்சிகரத்தைத் தகர்த்து, அவ்வூர் கோட்டை வாயில்களில் மாற்றரசர்புகும் வாயிலால் உட்சென்று, வீதிகளில் அகப்பட்ட வஸ்துக்களை யெல்லாம் அபகரித்துக் கடைசியில் அரண்மனை வாயிலடைந்தனர். பிராமணர்களென்றறிந்த மாத்திரத்தில் அரசன் திடீரென்று தன் ஆசனம் விட்டெழுந்து மரியாதை செய்து உட்காரும்படி வேண்டினான். இவர்கள் அம்மரியாதையாவும் ஏற்றுக்கொண்டிலர். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அரசனைநோக்கி "நீவிர், எம்மை நள்ளிருள் கழிந்தபின்பு காண்மின்" என்றனன். அப்போது அரசன் வந்து இவர்களைப் பார்த்து "ஐபன்மீர்! உங்கள் வேஷத்தோடிருப்பவர்கள் சந்தனமும் புஷ்பமும் அணியார்கள். நீங்கள் செய்த துராக்கிருத மான செய்கைகளையும் செய்யக் கனவிலும் எண்ணார்கள்.

* ஸ்நாதகமென்பது ஓர் விரதம், அதாவது பிரமசரியத்திற்குப் பின்னும் கிருகஸ்தாச்சிரமத்திற்கு முன்பு மனுசரிக்கப்படுவது. கிருகஸ்தனைப்போன்று வஸ்திரமும் பிரமசாரியைப்போன்று ஒற்றைப்பூணூலும் தரித்து, பலாசு தண்டம் நீக்கியிருக்கும் பிராமணன் ஸ்நாதக பிராமண னெனப்படுவான். இவ்விரதங்கொண்டவனுக்கும், பிரமசாரிக்கும் கிருகஸ்தனுக்கும் வேற்றுமைகள் இன்னும் சிலவுள.

தங்களுடைய நடவடிக்கைக்குரிய காரணம் யா" தென்றுன். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் "பிராமணர்களே யன்றி, க்ஷத்திரியர்களும் வைசியர்களும் ஸ்நாதக மென்னும் விரதத்தை யனுட்டிக்கலாம். யாங்களணியும் சந்தனம் இந்நாட்டிற்குவரும் லக்ஷ்மீகரத்தைத் தெரிவிக்கும் படியானது. விரோதியின் அரணை சரியான வாயிலால் அடைதல் கூடாது. ஆகையா லிதற்குத் தகுந்தபடி செய்தோம். விரோதியினிடமாக எங்கள் வேலையைப் பூர்த்தி செய்யாமல் அவனுடைய மரியாதையை யேற்று விருந்துண்டு கொண்டிருக்க மாட்டோம்" என்ருர். ஜராசந்தன் திடுக்கிட்டு "ஐயா! யானிழைத்த தீங்குயாது?" என்ருன். நரபலியிடப் பிரயத்தனம் செய்ததே பெருந்தீங் கென்ருர். அதைத் தடுக்கும் பொருட்டுத் தானும் தன் துணைவரும் அங்கு வந்தாகவும் அவர்களிலின்னுர் என்பதையும் எடுத்துரைத்தார். "மகததேசாதி பதியே! சிறைப்படுத்தி யிருக்கிற அரசர்களை விட்டுவிடுவாய்! அல்லாவிடில் யமனுடைய யுலகம் காண்பாய்! யுத்தத்திற்குடனே புறப்படுவாய்" என்ருர். அவனும் யுத்தத்திற்குச் சம்மதித்துத் தநயனைச் சிம்மாசனத்திலேற்றி, பீமனுடன் மல்லயுத்தம் செய்ய ஆரம்பித்தான். பதினன்கு நாளாயும் அது முடியவில்லை. அந்நாள் முடிவில் ஜராசந்தனுக்குப்பலம் ஒடுங்கிவருதல் கண்டு ஒரே பிடியாய்ப்பிடித்துச் சுற்றி யடித்து முழந்தாளில் அவன் முதுகை வைத்தொடித்தான் பீமன். ஜராசந்தன் உயிர்துறந்தான். ஸ்ரீ கிருஷ்ணபகவான் சிறைப்பட்டிருந்த அரசர்களை விடுவித்தனர். அவரும் பீமார்ஜுனரும் ஜராசந்தனுடைய தேரிலேறி அவ்விடம் விட்டு வந்தனர், சிறைமீண்ட அரசர்களும் சிறைப்படுத்தின அரசன் புதல்வனும் யுதிஷ்டரரை அரசர்க்கரசாக அங்கீகரித்தார்கள். *

தருமருக்கிளேவர்களாகிய நால்வரும் நாற்றிக்கினும் படையெடுத்துச் சென்றனர். அர்ச்சுனன் வடக்கிலும், பீமன் கிழக்கிலும், சஹாதேவன் தெற்கிலும், நகுலன் மேற்கிலும் சென்ருன். இவர்கள் நாற்றிக்கிலுமுள்ள அரசர்களை வென்று தம் தமயனைச் சக்கிரவர்த்தியாக அங்கீகரிக்கும்படி செய்தார்கள். நான்கு திக்கிலும் சென்றவர்கள் நவரத்தினங்களோடும் கணக்கற்ற திரவியத்தோடும் திரும்பிவந்தார்கள். அவற்றை யெல்லாம் தம் தமயன் முன்வைத்து நமஸ்காரம்செய்து அங்கீகரிக்கும்படி வேண்டினுர்கள். பிறகு தருமருக்கு அஸ்வமேதயாகம்செய்து முடிக்கலாமென்னும் தைரியமும் வந்தது †

(இன்னும்வரும்.)

கல்குளம்-குப்புசாமிமுதலியார்.

---

* வியாச பாரதம். சபாபருவம்: [§ 16 - 24]

† வியாசபாரதம் சபாபருவம். § 25 - 33

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர்.

---

“ ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாராவின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்டசைவசித் தாந்தம்.”


என்னு மெய்கண்ட சமயம், புறமதத்தர் கூறும் பித்துரை பேதுரைகளால் அலக்கழியா வண்ணம் சமயாசாரியர், சந்தான குரவர் முதலியோர் தோன்றி வரம்பு கட்டிச்சென்றனர். காலக் கதியால் வரம்பழியவே அதை மீட்டுக்கொடுக்க வந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் தங்கடமையை நன்கு முடித்துத் தற்சிவத்துற்றனர் எனக்கேட்டு மனந்திகைக்கின்றது. அந்தோ ! அவர் மறைந்ததால் சைவ சமயிகளுக்கோர் ஊன்றுகோல் கை நழுவி விட்டது போலும். சென்ற 35 வருடங்களாகச் சைவ சம்பந்தமான அனேக காரியங்கள் அவர் செய்திருப்பதாலும், அவைகளின் பலனைப் பலரும் அனுபவித்துக்கொண்டு வருவதாலும், அவர் நம்மைவிட்டுப் பிரிந்தாரென்பது தோன்றவேயில்லை. அவர் காலமாய்விட்டதால் உண்டான மன நோயைப் பல பத்திரிகைகளும் பண்டிதர்களும் முறையிருட்டிருப்பதால் அம்மகா புருஷரத்தினத்தினிடத்தன்பும் நன்றியும் பாராட்டாத சாம்பவன்எவனுளன் ? அவர் வேதாகம வுணர்ச்சியையும் விஜய வைபவத்தையுங் கேட்க விரும்பாத ஆரிய னெவனுளன் ? அவர் வாக்கு சாதுரியத்தையுந் திரவிசேடத்தையும் வாத கம்பீரத்தையுந் தெரிய விரும்பாத வேதபாஹ்யனெவனுளன் ? ஆகவே அவர் பிரதாபத்தை யிடங்கொடுத்த வரையில் ஒருவாறு சுருக்கி யெழுதலாயிற்று. விஷயங்கள் தொடர்ச்சியா யிராவிடின் உலகம் நம்மைப்பொறுக்க.

### பிறப்பு வளர்ப்பு.

நமது நாயகரவர்கள் சென்னைச்சூளையில் நிலைபெற்றிருந்த ஓர் வைணவ குடும்பத்தில் கி. பி. 1846௵ ஆகஸ்டும௴ 6௳ ஆதிவாரம் சிம்மலக்கினத்தில் நான்குகோள் உச்சவமாகச் சைவத்துறை விளங்கப்பிறந்தனர். **அரங்கசாமி** யெனத்தாய் தந்தையர்களிட்ட பெயரை இவருக்குப்பந்துவான அச்சுதானந்தரெனும் ஓர் சைவசன்னியாசி மாற்றி **சோமசுந்தர**மென வழைத்துத்தாம் வளர்த்துச் சிவாதிக்யம் போதித்துச் சைவராக்கி வடமொழி தென்மொழி கற்பித்துவந்தனர். இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலமுந் தெலுங்கும் பயின்று பிரவேச பரிக்ஷை வகுப்பு வரையில் வாசித்துக்கொண்டிருந்தார். இன்னம் நான்கு பாஷைகளிலும் போதிய ஞானம் வருவித்துக்கொண்டு * இந்நகர விசாரணைச் சாலையில் உத்தியோகத்தி லமர்ந்திருந்தார்.

---

* Madras Municipality.



ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர நாயகர்.

## சமய விசாரணை.

அச்சுதானந்தர் ஏகான்ம வாதத்திற் பற்றுடையவராய்த் தம் மாணக்கருக்கும் அதையே போதிப்பாராயினர். கற்ற விஷயங்களைத்தம் நுண்ணிய ஆராய்ச்சியாற் சீர்தூக்கிச் சிக்கறுப்பதாகிய பெருங்குணமிவரிடத்திருந்தாலும் செவியிற்பட்டதை யெல்லா நம்பும் பேதைமையில்லாமையானும், ஏகான்மவாத நூல்களில் தமக்குச் சந்தேகமும் போதனையில் முரணு நேர்ந்துழி ஆசிரியரை விடாது தக்க சமாதானங்கள் கொடுக்கும்படி நெருக்குவர். நுட்பமான கேள்விகளால் பலமுறை ஆசிரியர் விடை யிறுக்க முடியாது மயங்கியதுண்டு. அப்போது நாயகரவர்கட்கு வயது 20 இருக்கலாம். அது புறச்சமயிகள் சைவத்திற்கின்னல் தேடிக்கொண்டிருந்த காலம். கறையான் குட்டை சபாபதி முதலியார் என்பவர்க்கிவர் உதவியாயிருந்து பிரசங்க வாயிலாய்ச் சைவ சமய உண்மையினைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார். அவரது சிவநேசத்தன்மையை உணர்ந்த மதுரைநாயகம்பிள்ளை யென்பவர் இலவசமாய்க் கொடுத்த மெய்கண்ட சாத்திரத்தை முழுவதுங் கற்று, ஆசிரியர் போதனையிலுள்ள வழுக்களை அவர்க்கு எடுத்துக்காட்டி யச் சாத்திரத்தில் பற்றுண்டாகும்படி செய்தார். பின்பு அச்சுதாநந்தர் காஞ்சியை யடைந்து ஆதிசைவரிடம் ஆசாரியாபிடேகமுற்று, ஏகாம்பர சிவயோகியாரெனத் தீக்ஷா நாமம் பெற்றுக்கொண்டனர். நாயகரவர்கள் வைணவத்திற் பிறந்து, பின்பு தமக்கு ஏகான்மவாதம் போதித்த ஆசிரியருந் தாமுஞ் சைவ சித்தாந்த போதகராயினமையை நோக்க, அவராராய்ச்சியின் தெளிவு நன்குபுலப்படும். உத்தியோக நிர்ப்பந்தத்தால் சமயப் பாதுகாப்புக்குவேண்டுங் அவகாசங் கிடைக்கப் பெறுமையின் தஞ்சுய நயத்தையும் போற்றுது 1881ஹ வேலையை விட்டு நீங்கினர்.

## நூலாசிரியத் தன்மை.

நாயகரவர்கள், சற்றேறக்குறைய 100 சத் கிரந்தங்கள் இயற்றியுள்ளார். அவைகளில் "வேதபாஹ்ய சமாஜகண்டநம்" என்னும் முதல் நூல் 1868ஹ ஆகஸ்டுமீ வெளியாயிற்று. சுந்தர சிவாசாரியர் என்பவர் பெயரால் தாம் இயற்றிய சிவாதிக்ய ரத்நாவளி ௧-ம் பாகத்திற்கு உ-பாகம் பின்பு இயற்றி 1873ஹ வெளியிட்டு அந்நூலைப் பூர்த்தி செய்தார். அந்நூலுடன் அவர் புகழும் வெளியேறிற்று. அவரியற்றிய மற்யைற நூல்கள், **சைவசூளாமணி, பரதத்துவப் பிரகாசிகை, பிரம்மதத்வ நிருபணம், அர்ச்சாதீபம், ஆதி சைவப்பிரபாவம், சித்தாந்த ரத்தினகரம், சித்தாந்த ஞான போத** முதலியனவாம். பிந்திய விரண்டுஞ் சஞ்சிகை ரூபமாய்ப் பல அருமை நூல்களை யுள்ளடக்கி வெளிப்போந்தன. அவற்றின் அந்தம் "மெய்கண்டசிவ தூஷண நிக்கிரஹம்" என்னு உண்மை நூல். இது அவருடைய இறுதிக்காலத்திற்கு 6-திங்கள் முந்தி வெளிப்பட்ட நூல். ஆக 33 வருஷம்

கிரந்தகர்த்தரா யுழைத்தாரென்பது தெரியவருகிறது. இவர் நூல்களை இரண்டு பெரும் பிரிவுகளாக்கலாம். ஒன்று சைவத்தின் பெருமையைக் கூறுவது; மற்றொன்று புறமதங்களின் புறங்கூற்றுகளை விசாரித்து அம்மத சொரூபங்களிலுள்ள வழுக்களை யெடுத்துக்காட்டுவது. அப்பைய தீக்ஷித சுவாமிகளும் இவ்வாறே சுயமதஸ்தாபனமாகவும் புறமத பங்கமாகவும் நூலியற்றி யுள்ளராதலினாலும், புறமதத்தினர்க்கு நல்லறிவுச் சுடர்க் கொளுத்தவேண்டு மென்ற காருண்ய மேலீட்டா லக்கிரந்தங்களை நாயகரவர்கள் சலியாமல் இயற்றியதாலு மவருக் கழியாப்புகழும் புண்ணியமும் சித்தித்தன. தமிழில் கத்தியரூபத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகளை இவர்தான் முதன் முதல் வெளியிட்டவர் இவர் தமக்கெனவோர் மணிப்பிரவாள நடையைக் கற்பித்துக்கொண்டு வாசிப்பவர்க்கின்ப மூட்டும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்.

## பிரசங்கங்கள்.

அவர் கிரந்த கர்த்தாவா யிருந்ததுமன்றித் தமிழ் நாடெங்குமுலவித் தம் பிரசங்க கர்ச்சனையால் சைவத்திற்குப் பழிகூறியவர்கள் ஓடிப்பதுங்கும்படி செய்திருந்தார். தென்தேசத்தின் ஒவ்வொரு பிரதான நகரத்தாருமவர் பிரசங்க மழையைச் செவியான் மாந்திய துண்டு. சைவசித்தாந்தத்தின் மகிமை இவர் பிரசங்கத்தால்தான் அதிகமாய் வெளியாயிற்று. "சமயங்களெல்லாஞ் சித்தாந்தத்திற்கு அங்கமாகும்; சித்தாந்தத்திற் கெம்மதமுஞ் சம்மதம். இதற்குமேற்பட்டுச் சமயப்பொதுமை யுடையது மற்றெம்மதமுமில்லை" என்னு முண்மையினைக் காட்டிப் பலரைச் சித்தாந்திக ளாக்கிவிட்டனர். திரிசிரபுரத்தில் இவர் அடுத்தடுத்துப் பிரசங்கஞ்செய்ய நேரிட்டதால், அங்குள்ள அந்தணர்பலர் இவர் வாக்கைக் குருமொழியாகக் கொண்டிருந்தனர். இவர் பிரசங்கத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி ஒரே சிந்தனையாயுற்றுக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவர் அப்பையதீக்ஷிதரவர்களைப் போன்று சதநூல்களியற்றி, ஹரதத்தரைப்போன்று தீரம் வகித்துத் திருஞான சம்பந்தரைப் போன்று திருமேனிகொண்டு, திருநாவுக்கரசைப் போன்று சிவவேடம் பொலிந்து, சுந்தரரைப்போன்று தாமரைத்தண்ணீர்க் கொப்பாமில்லற வாழ்க்கையை நடத்திச் சேக்கிழார் போன்று அடியார் பெருமையைவிளக்கி, மணிவாசகரைப்போன்று இன்னிசையாய்க் கனிவாய்ப் பிரசங்கித்தால் யாவர்தான் இவர் கட்டில் அகப்படாதார். திருநெல்வேலிச் சிவாலயத்தில் தத்துவ மண்டபத்தில் இவர் சில வருடங்கட்குமுன் செய்த பிரசங்கத்தின் அருமையையும் வலிமையையும் அளவிடற்கரிதெனஅப்பதியிலுள்ளார் இன்றும் இறும்பூதெய்துகின்றனர். சென்னையில் அவர் பிரசங்கங்களால் விளைந்த பலன்களை நோக்குழி, அவர் அருண் மூர்த்தியெனவே யெண்ணலாம். சமயாசாரியர் நால்வர்க்கும் பல் ஸ்தலங்களிற் றிருவிழா உண்டானதிவரின் பெருமுயற்சியாற்றான்.

## நன்குமதிப்பும் பட்டப்பேறும்.

இவ்வாறு பல நூல்களானும், சைவப்பெருமணங் கமழுந்துரித கம்பீர வாக்கினுற் செய்த பிரசங்கங்களானும், சித்தாந்தத்தினுண்மை பிரகாசிப்பிக்கச் செய்தமையின், மடாதிபதிகள், ராஜாக்கள், ஜமீந்தாரர்கள் இவருக்கு வேண்டிய உதவி புரிந்துவந்தனர். ராஜா பாஸ்கர சேதுபதியவர்கள் "வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்"; என்னும் பட்டப்பெயர் தந்து மேம்பாடியற்றினர். திருவாவடு துறையார் "பரசமயகோளரி" யென ஆசீர்வதித்தனர். சாம்பவர்களெல்லாஞ் "சைவமார்த்தாண்டன்" எனப் புகழ்ந்து கொண்டாடினர்.

## இறுதிக்காலம்.

முப்பது ஆண்டுகளாகச்சைவ நுட்பங்களிலாழ்ந்து உழைத்துவந்த இவரதுதேக சௌக்கியம் 1898ஞூ முதல் குன்றிக்கொண்டேவந்தது. அதையு நோக்காது தங்கடமையை நிறைவேற்றிக்கொண்டே வந்தார். சதுர்வேதம் போன்ற நான்கு கிரந்தங்கள் இவ்விறுதிக்காலத்து வெளியாயின. வெளி நகரங்களிலும் பல பிரசங்கங்க ளிடையிடையே நடந்துகொண்டு வந்தன. அவர் சென்னையிற் கடைசியாய்ச் செய்த பிரசங்கம் காசிவிஸ்வநாதர் ஆலயத்தில். அப்பிரசங்கத்தின் சுவை இன்றுமினித்துக் கொண்டிருக்கிறது. அது நடந்து ஒரு திங்கள் முடியுமுன் விசுவேஸ்வரர் அவருக்குத் தாரகமந்திர மோதியது அவ ருபன்னியாச மகிழ்ச்சியாலெனச் செப்பலாம்.

நாளது 1901ஷ பிப்ரவரிமீ 22வ சுக்கிரவார மாலை 4 மணிக்குத் தங்குருக்களைத் தருவித்து, விபூதிப்பிரசாதம் பெற்றுத்தரித்துத் தன்குமாரரைத் தேவார திருவாசகங்களோதச் செய்து கவனித்துத்தாமே "திருச்சிற்றம்பலம்" எனப்பூர்த்தி செய்து, கைகூப்பிச் சிரசிற்சேர்த்து "இதோ இடபவாகன ரூடராய் அர்த்த நாரீஸ்வரர் வந்திருக்கிறார். தரிசியுங்கள்" என்னுந் திருவார்த்தையுடன் மௌனஞ் சாதித்துச் சிவராஜ யோகத்திலமர்ந்திருந்தார். மார்த்தாண்டன் படும் வேளை வந்தது. ஹரஹர ! "சைவ மார்த்தாண்டன்" அவ்விதானத்தை யுற்றார்.

"செய்யுந் திருவொற்றி யூருடை யீந்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே"

என்பதிற் கிஞ்சித்தும் பிழையாம லுற்றதை நோக்க நாயகரவர்கள் தெய்வீகத் தோற்றமும் சிவப்பிரீதி மறைவுமுற்று ரென்பதே துணிபு.

நீ. தங்கவேலு முதலியார்.

———

# அசூயாதேவி.

---

இருடிகளினு லியற்றப்பட்ட பதினெண் புராணங்களும் மற்றுமுள்ள இதிகாசங்களும் **அசூயா**தேவியின் மகத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்யாமலிருப்பதைப் பார்த்தால் யார்தான் கிலேசமடையார்? இந்தப் பெயரை யுச்சரிக்கக் கேட்டமாத்திரத்திலேயே இவளின்னாரென்பது இதை வாசிப்போர்களுக்கெல்லாம் தெரியாமலிராது. யுகயுகாந்தரங்களிலும் தனதுசக்தியை மூவுலகிலும் பிரயோகித்து ஹரிஹரப்பிரம்மாதிதேவர்களையும் மனிதருலகிலவதரிக்கச் செய்தவளும், எல்லாப்புராணங்களு மியற்றப்படுவதற்குக் காரணபூதையாயிருந்தவளு மிவளே யாவள். முற்காலத்தில் சுராசுரர்கள் சமுத்திரமதனத்தினுல் "சதுர்தச (பதினான்கு) ரத்னங்க"ளைக் கைக்கொண்டனரென்பது புராணப் பிரசித்தமான விஷயமன்றே? அப்போதே இவள் கூடத் தேகதாரியாகிப் பிறந்திருந்தும் தனது மாயையின் வல்லமையினுல் அதிருசியளாகி (கண்ணுக் ககப்படாதவளாகி) அசுரரைக் கணவராக வரித்துக்கொண்டு, அம்ருதத்தைத்தனது கணவராகிய தைத்தியருக்கே உரியதாக்கிக்கொடுக்க வேண்டுமென்ற வுபாயத்தை யிவள் கற்பித்தனள். இந்தப்பிரகாரமாக சுராசுரர்களுக்குப் பேதபாவனையை யுண்டாக்கினள். ஆயினும் தம்மைப்பீடித்துக் கொண்டிருக்கிற இவள் யாரென்று சுரர்களுக்கு மசுரர்களுக்குந் தோற்றுமற்போனது மிகவுமாச்சரியமானதேயாம். ஆகையால் இவளுடைய மகிமை வர்ணிக்க முடியாததென்பதேசரி.

தேவலோகத்தை வெகு விதங்களிற் பீடித்ததன்றிப் பூலோகத்திலும் தான் யாரென்பதை ஜனங்களுக்கெல்லாம் தெரிவிக்கும் பொருட்டு நாமிருக்கு மிவ்வுலகத்தையுங் கூட இவள் தன்னுடைய நிவாஸஸ்தான மாக்கிக் கொண்டனள். கடந்த யுகங்களில் தபாலாபீசும் தந்திதபாலு மில்லாதிருந்ததைக்கண்டு சிந்தையினுல் மனமிகவு நொந்தவளாகி **அசூயா**தேவியானவள் நாரதமுனியைத் தனது ஏஜன்டாக (காரியஸ்தராக) நியமித்தாள். இது முதலான பற்பலவுபாயங்களினுல் இவள் தன்னுடைய மாயாசக்தியின் மூலமாய் இவ்வுலகத்திற் பிரகாசித்துக் கொண்டும் பேதபாவனையின் பீஜங்களை (வித்துக்களை) விதைத்துக் கொண்டு மிருக்கின்றுள்.

இவள் பூலோகத்து அரசர்களில் அஹிதசிந்தனைகளை (கெட்ட எண்ணங்களை) விதைத்து வேரூன்றச்செய்து உலகத்திற் கினிமையாகிய சாந்தத்தைக் கெடுப்பாள். தந்தை மகனுக்கும், புருஷன் மனைவிக்கும், மித்திரருக்கும் துவேஷ பாவனையை உண்டாக்கிக் கொண்டிருப்பாள். இந்த விக்கின காரிணியானவள் பற்பல விதமாய் ஒருவர்க் கொருவர் விரோதமான அபிப்பிராயங்களை யுண்டாக்குவதுமன்றி ஜனங்கள் கலகத்தை விசுவசிக்கும்படியும்

செய்கின்ருள். இவள் கொடுத்துவருந் தொந்திரவுகளை நாம் பொறுப்பது அசாத்தியம்.

இந்த மாதேவியானவள் நமது பரதகண்டத்துக்குக்கூடத் தயை கூர்ந்து தரிசனமளித்திருக்கிருள். இவள் நமது நாட்டிற் பிரவேசித்த வுடனே கலகம் முதலான உபத்திரவங்கள் தலைகாட்டின. இவளுடைய தசையினுலேயே பிருதுச் சக்கிரவர்த்தி தமது இராச்சியத்தை மாத்திரமே யன்றித் தம் ஜீவனையுங் கூட இழந்தார். நமது பரதகண்டமானது இவளு டைய ஸங்க (சேர்க்கை) தோஷத்தினுல் அந்நிய வரசர்களி னுளுகைக் குள்ளாகவேண்டி வந்தது. நம்மெல்லாருடைய துர் தசாவஸ்தைக்குங் காரணபூதை இவளே யாவள். ஸத்யதேவதையைப் பஜிப்பவருங்கூட இவ ளுடைய ஸங்கத்தினுல் தாங்கள் வழிபடுந் தேவதையினின்று தூரமானுர் கள். நற்குணங்கள் இவளுடைய தரிசனமாத்திரத்தினுல் ஓட்டம் பிடிக்கின் றன. இவளுடைய பராக்கிரமம் மேன்மேலு மதிகப்பட நமது தேசோன் னதையின் இலக்ஷணங்கள் குறைந்துபோய்க்கொண்டே வருமென்று மறுபடியுஞ் சொல்லவேண்டிய அவசியமில்லை.

எவனொருவன் இவளை வரித்து (நேசித்துறவாடி)க்கொள்கிருனே அவன் இவ்வுலகத்தில் தன்னுடைய தநு மன தனங்களை (தேகம், மனது, திரவியங் களை)யும் போக்கடித்துக் கொள்வது மன்றிப் பரலோகத்தில் எள்ளளவும் நன்மையடையாது, யமராஜனுல் சிக்ஷிக்கப்பட்டு எக்காலத்து மெரிந்து கொண்டிருக்கிற நரகாக்கினிக் குழியிலாழ்ந்து சங்கடங்களை யநுபவிக்க வேண்டிவரும்.

பத்திரிகைகளின் விஷயத்தில் இந்த அசூயாதேவியானவள் பாலா ரிஷ்டமாகப் படுத்துவள். நமது ஞானபோதினி விஷயத்தி லிவள் மிகுந்த தயையுடன் தரிசனங்கொடுக்க ஆவல் காட்டியும் அதனை நடத்துபவர்பின்ன லிங்கமல்லாது பூர்ணலிங்கமாதலின் தேவியின் வல்லமை நடந்தேரு தாயிற்று. தேவி மாயைவடிவமானவள். மாயையோ பூரணலிங்காகாரமான பரமசிவனுக் கடங்கும். அன்றியும், அச்சிவபிரானது பிரத்தியக்ஷரூபமான சூரியநாராயண மூர்த்தியே இப்பத்திரிகையை விளக்குவித்து, மாயை யெனு மிருள்மூடாது தனது கிரணங்களைப் பரப்பிக்காத்துப் பிரகாசிக்கச்செ ய்து வருகின்றுர். இது நிற்க, திரிமூர்த்திகளாயினும் நாரதமாமுனியைக் கண் டால் வணங்கிநிற்பரன்றே? நாரதரோ அசூயாதேவியின் முதன்மையான ஏஜண்டு. டெலக்ராப் மாஸ்டரான நாரதர் முகமனியம்புவதிலும் தாம் லோ கோபகாரி யென்று காட்டுவதிலும் மிகத்தேர்ந்தவர். ஆகவே அவரை அசூயா தேவி நம்பால் அனுப்பாதிருக்குமாறு அவரைப் பிரார்த்திக்கின்றேன். நாரத ருடைய விஜயம் இத்திக்கில் வேண்டாம். ஆயினும் அசூயாதேவியி னுபாயங்க ளோ பல விதமான்வை. திரேதாயுகத்தில் மந்தரையின் மனதிற் புகுந்து

ஸ்ரீராமனைப் பதினுன்கு வருஷகாலம் வனவாஸஞ் செய்யும்படி விதித்தமகாத்மா இவளன்றே ?

விக்கினகாரிணியும், தோஷங்கள் நிறைந்தவளுமான இந்த **அசூயாதேவியின்** புத்தியையும் சக்தியையும் வர்ணிப்பது அசாத்தியமாகும். **சனி** மகாத்மியத்தைப் படிப்பவருக்கும் கேட்பவருக்கும் எழுதுபவருக்கும் சனீசுவரனுற் பாதை யுண்டாகாதென்று கிழவரும் கிழவிகளும் தமது பௌத்திர பௌத்திரிகளுக் குரைப்பதுண்டு. அதே மாதிரி, **அசூயாதேவியின்** மான்மியத்தை "ஞானபோதினி" ப்பத்திரிகையிற் பிரசுரிப்பதனுல் 'அதற்கு அவளுடைய ஸங்கத்தினுலுண்டாகக்கூடிய தோஷங்கள் தூரமாவதற்கும், அவளுடைய ஏஜன்டான "நாரதர்" அணுகாதிருக்கவும் போதுமான சாந்தியென்றுநம்பி, **அசூயாதேவியின்** மகாத்மியத்தை இங்குஎழுதலானேன்.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

## இந்துஜனசமூகச் சீர்திருத்தம்.

(293-ஆம் பக்கத் தொடர்ச்சி).

"நிறம்" என்று பொருள்படும் "வர்ணப்," என்னும் வடமொழிப்பதமும், "வமிசம்" என்று பொருள்படும் "சாதி" என்னும், வடமொழிப்பதமும், இந்துக்களுக்குள் வழங்கும்; நான்கு நிறத்தினர் தேசம் எனப் பொருள்படும் "சதுர்வர்ணிபா" என்னும் வடமொழிப்பதம் இந்தியாவுக்குத் தொன்றுதொட்டுள்ள ஒரு சிறப்புப்பெயராம். தற்காலத்திலும், சாதிவேற்றுமை, இந்துக்களுக்கேயுரிய ஓர் அடையாளமென்று வேறு தேசத்தவர்களும் நினைக்கின்றுர்கள்.

சாதிவேற்றுமை, ஐரோப்பியருள்ளும், மற்றும் பிறத்தேசத்தவருள்ளும் வழங்கிவரும். கல்வியாலும், செல்வத்தாலும் உயர்வு தாழ்வைக்குறிக்கும் **படித்தரத்திற்கு** (Rank) அது ஒப்பாமேயொழிய வேறன்றென்று சிலர் வீணே பிதற்றுகின்றுர். இவ்வாறு கூறுதல் தவறு. என்னே ? உயர்வு தாழ்வைக்குறிக்கும் படித்தரமானது, எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அவரவர் மேம்படு செய்கையாலும், செல்வத்தாலும் பெறத்தக்கது. இந்திய **சாதியோ**, அவ்வாறல்லாது அவரவர் பிறப்பினளவினதேயாம். அஃது ஒரு வகுப்பினர் மற்றெரு வகுப்பினராதற் கிடங்கொடாது. தாழ்ந்த வகுப்பினன் தக்கோனெனப் புகழெய்தினும், உயர்சாதிச்சேர்தல் கிட்டாது. பெருவலியுள்ள மன்னரேயாயினும் உயர்சாதிப்பெயரை மரியாதையைக்

குறிக்கும் பட்டமாகவேனும் பிறருக்குக் கொடுத்துக் கனப்படுத்தவு மிய லாது. மடையனேனும் பார்ப்பனன் பார்ப்பனனே; வள்ளுவனையொத் தானேனும் பறையன் பறையனே. ஒரு வகுப்பினன் மற்றொரு வகுப்பின னாதற்கு முயல்வதைவிட *கர்த்தபம் குதிரையாதலெளிது. ஆகையால் அன் னோர் கூற்று அறியாமையை விளக்கும்.

முற்காலங்களில் நெடுங்கால வழக்கம் கைவிடாது அதைப் பின்பற் றலே ஆசாரமென்றெண்ணப்பட்டது. இது, ஜனசமூகம் முன்னுக்குவாராது நின்ற நிலையிலேயே தங்குவதற் கேதுவாயிற்று. தற்காலத்திலோ உண்மை ஆராய்ந்தறிதல் மேலிட்டிருத்தல் பற்றி முற்காலந் தொடங்கிவழங்கி வரும் ஒவ்வொரு ஏற்பாடும் தொன்மை யுடைத்தேனும் நன்மைபயக்கு மேல் அதனைக் கைக்கொண்டு இன்றேல் அதனை நீத்தலே பேரறிவாம். என்னை ? நீடித்து வழங்கிவரும் ஆசாரங்களையும், நிபந்தனைகளையும், ஆழ்ந்த யோசனையும் போதுமான காரணங்களு மின்றிக் கடிதலாவது நீத்தலாவது கூடா வொழுக்கம். ஆகவே இவ்விந்தியாவில் நீடித்து வழங்கிவரும் சாதி வேற்றுமையின் நன்மைதீமைகளை யாராய்ந்தறிதல் வேண்டும். ஆராயப் புகுமிடத்து, நன்மை தீமைகளை விரித்துரைக்குமுன் சாதிவேற்றுமையின் உற்பத்தி யபிவிர்த்தி முதலியவற்றை சோதித்தறிதல் அவசியமாகும்.

சாதி வேற்றுமை தோன்றியதற்கு நம்மனோர் கூறுமுகாந்திரமெ ன்னை ? பலவுள. இந்துக்களின் சாத்திரங்களில் ஒன்றிலும் ஒருவித மாகக்கூறுவதில்லை. ஒன்றற் கொன்று மாறுபடக்கூறி யிருக்கின்றன. பிர்ம்மாவின் வாய், தோள், தொடை, அடி, முதலிய நான்கு ஸ்தானங்களி னின்றும், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய நான்கு வருணத்தாரும் தோன்றினர் என்னும் கதை சாதாரணமாய் இந்தியா வெங் கும் வழங்கிவரும். பூ: புவ: ஸ்வ: என்ற மூன்றுவார்த்தைகளி னின்றுந் தோறினர்க ளென்றுசத்பாத பிராமணம் கூறும். வேதத்தி னின்று தோன்றினர்களெனத் தைத்ரீயபிராமணம் கூறும். இதே புத்தகத்தில் வேறொரு பாகத்திற் பார்பனர், சுரரிடத்தினின்றும் சூத்திரர் அசுரரிடத்தி னின்றுந் தோன்றினரென்பது கூறப்பட்டுளது. ஒரு புத்தகத்தில், மனி தர்கள் வைவஸ்வத ருஷியின் புத்திரர்களென்றும், மற்றொரு புத்தகத்தில், மனுவின் சந்ததியாரென்றும் சொல்லப்படுகிறார்கள். வேறொரு புத்தகம் அதே பெயருடைய ஒரு பெண்ணி னின்றுந் தோன்றியதாகக் கூறும்.

பாகவத புராணம் சத்தியயுகம் என்று பொருள்படும் கிரேதா யுகத் தில் மனிதர் ஒரே சாதியாராயிருந்தா ரென்றும் வாயு புராணம் திரேதா யுகம் வரையில் சாதி பலவாகப்பிரிக்கப் படவில்லையென்றும் கூறும்.

---

* கர்த்தபம்—கழுதை.

இவ்வாறு ஒன்றற்கொன்று மாறுபடக் கூறியிருத்தலால், இச்சாத்திரங்களின் கூற்று ஒன்றேனும் உண்மையாகா. நியாயஸ்தலத்தில், சாட்சிகள் ஒருவரோடொருவர் மாறுபடக்கூறுவரேல் நியாயாதிபதி ஒரு சாட்சியையேனும் உண்மையென்று ஒவ்வாரல்லவா? மாறுபடக்கூறும் இச்சாத்திரங்களும் தெய்வானுகூலம் பெற்றதென்பது எவ்வாறுகொள்ளப்படும்?

ஆயின் **சாதிவேற்றுமையின்** உண்மையென்னே? (1) **வது வமிசவேற்றுமை.** இது, வமிசம் என்று பொருள்படும் **சாதி** என்னும் பதத்தாலும் நிறம் என்று பொருள்படும் **வர்ணம்** என்னும் பதத்தாலும் நன்கு விளங்கும். ஆரியர்கள், மத்திய ஆசியாவிலேயோ ஒரு பாகத்தினின்று, ஜனப்பெருக்கத்தாலோ, பிழைப்பின்மையாலோ, தங்கள் குடிசைகளைச் சுமந்துகொண்டு, ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு நூதனபூமி நாடிவருங்கால், யாவரும் ஒரே சாதியராயிருந்தார்கள். அவர்கள் குளிர்பூமியினின்றும் வந்தவர்களாகையால் வெண்ணிற மேனி யுடையவர்கள். பின்பு இந்துதேசத்தில் சிந்துநதிக்கரையை வந்தடுத்துப் புராதனக்குடிகளாகிய கருநிறத்தினரை யோட்டிப் பயிர்த்தொழிலில் பயின்றாராதலால், ஏர் அல்லது கலப்பை என்று பொருள்படும் **ஆர்** என்றும் வடமொழிப்பதத்தினின்றும் பிறந்த **ஆரியர்** என்னும் பதம் உழவர் என்று அர்த்தங்கொள்ளுமாதலால் அப்பெயரைத் தமதெனக்கொண்டு, விரோதிகள் எனப்பொருள்படும் **தாசியர்** என்னும் பெயரைப் பூர்வீகக்குடிக்களுக்குத் தந்தார்கள். பின்னர், நாகரீக விர்த்திக்கு, உழவே தலைமையாதலால், முன்னர் நாடோடிகளாய்ப் பல்லூர் திரிந்து முடிவில் இந்தியாவில் வேளாண்மை பூண்டு நிலைத்துக்கனம் பெற்றாராதலால், **ஆரியர்** என்னும் பதம் பெருந்தகைமையரென்று பொருள்பட்டது. இவரோடு இடைவிடாது போராடிக் கடைசியில் பூர்வீகர் சிலர் இவர்க்குட்பட்டடங்கிக் குற்றேவல் செய்தாராகையால், **தாசன்** என்னும் பதம் அடிமையென்று பொருள்பட்டது. பின்பு **தாசர்** என்றும் பெயர் கருநிறத்தினர் யாவருக்கும் பொதுவாகக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு துவக்கத்தில், வெண்ணிறத்தார், கருநிறத்தார்; வென்றார், வெல்லப்பட்டார்; சுயாதீனர், அடிமை; என்பவர்களை முறையே குறிக்கும் **ஆரியர், தாசியர்** என இருவகுப்பினர் தாம் இருந்தார்கள். **வேதத்தில்** இவ்விருவகுப்பினரைத்தவிர வேறு சாதிகள் கூறப்படவில்லை. அக்காலத்தில் ஆரியர்களுக்குள்ளும் உள்வகுப்பினரில்லை. அவர்களே சமயத்திற்கேற்பப் பலதொழிலும் செய்துவந்தனர்; சமாதானம் நிறைந்துள்ள காலத்துப் பயிரிட்டும் பண்டமாற்றியும், ஆனிரைகாத்தும், யுத்தகாலங்களில் திடதேகத்தினர் ஆயுதபாணிகளாய்ச் சென்று எதிரிகளைக்களத்தில் வென்று மீண்டும் தம் பரிவாரத்தோடு, "மேழிச்செல்வம் கோழைபடா"தெனக் கலப்பையைக் கைப்பற்றுவாராயினர். இதை இருக்கு வேதத்திற்பரக்கக் காணலாம். இந்நிலைமை சுமார் கி. மு. 2000 அல்லது 1400 வருஷங்களுக்கு இடையிலுள்ளது.

பின்பு, ஆரியர், தாசியர் என்னும் இருவகுப்பின ருள்ளும், சிற்சில வித்தியாசங்களுண்டாகவே வேறு சாதிகளுண்டாயின. என்னை ? வைதீகச் சடங்குகள் நாளுக்கு நாள் அதிகமாய் விர்த்தியாகவே, கங்கையாற்றங் கரையிலுள்ள அநேக பே ரரசர்கள் எண்ணிலாப் பலிகொடுக்கவும் முடிவிலாச் சடங்குகளும் ஆராதனைகளும் செய்யவுந் தலைப்பட்டா ராதலானும், இச்சடங்குகளையும் பலிகளையும் ஊனமின்றிச் செய்து முடிக்குமாறு ஏற்படுத்தப்பட்ட குருமார்கள் அதிகத்திறமை யுடையாராதலானும் அக்குருமார் நாளுக்கு நாள் ஏனையோரை விட உயர்வுடையாரென்று கருதப்பட்டார். முடிவில் அவரோர் சாதியரானார். அவர்கள் தங்கள் வாணாளை வைதீகச் சடங்குகளையும் விதிகளையும் கற்பதிலேயே செலவிட்டார் ; அவரே அச்சடங்குகளை முடிக்கவல்லார். ஆகையால் நாளடைவில், அவரே வைதிகச்சடங்குகளுக்கு உரியராயினரென ஏனையோர் நினைக்க விடமாயிற்று. குருத்துவம், தெய்வத் தன்மையுடைய தென்று ஜனங்கள் அறியாமையாலெண்ணவே அப்பாத்தியம் சந்ததி பற்றிவரத் தொடங்கிற்று. பின்பு அன்னோர் ஏனையரோடு சம்பந்தம் செய்தல் கூடாதென்று விலக்கினர். ஆடவர் ஏனையர்மகளிரை மணமியற்றினும், பெண்கள் தம் சுற்றம் விட்டுப் பிறசுற்றத்து வரனைக் கொள்ளுதல் கூடாதெனக் கடிந்தார். இவ்வழக்கம் முற்றி உறுதிப்படவே, குருமார்கள் ஒரு சாதியானார். அவரே பார்ப்பனர்.

(இன்னும் வரும்.)

சா. சோமசுந்தரம் பிள்ளை.

---

## மழை விண்ணப்பம்.

---

### நேரிசை யாசிரியப்பா.

கடலுடைக் கண்ணுறைக் காடுடை யுலகில்
மடைதிறந் தன்ன வான்வழங் காமையின்
இல்லறம் வாழ்வாங் கினிது வாழ்நரும்
நல்லர்வரினு நகைமுகங் கோணுவர்
சுரக்குங் கிணறுந் தொல்பொரு ளாளரும்
இரக்கச் செலினு மிடுவா ரிலையே
நிலத்திற் கடலி னேரிழை மார்பில்
இலமில் குன்று மின்று குன்றுமே
எலியின் வடிவுடை யினையதோர் சவலை
வலிந்து சுவைத்து வாய்ப்புண் கொளுமவ்
வாய்ப்பு ணுற்று மருந்து முலர்ந்தன

தாய்வயிற் றுயிரொடு தானுயக்கு கிற்கும்
உள்ளவிடங்கண்டுவந்து வருத்திக்
கொள்ளைகொண்டு குளிர்பவர்போலக்
கோடாசிலைமுட் கூர்ங்கள்ளியெருக்கு
வாடாவெனினு மருங்குறு வாரிலை
ஒழுக்குத் துன்பமும் உறுபுகைத் துன்பமும்
ஒழிந்தனவெனினும் உளனெழுந்திலதே
கானவாழைகள் கவின்று பல்குங்
கானஞ் செல்லக் காலெழுந்திலதே
செல்வங் குறைந்த செல்வர் மக்கள்போற்
பல்வகை வாழையும் பாக்குஞ் சாம்பின
புழுகு மணங்கமழ் பூவுடைக்கானப்
புழுகு பூனைபோற் பொரிந்து போயின
கழுகுங் கொடியுங் களித்துானுணினும்
அழலையாற்று தலைக்கண் கொளுமே
வெய்துடைக் கொடுங்கோல் வேந்தனின்மையால்
நெய்தல் பூவாது நெய்தல் பூத்துக்
காவலின்றிக் கல்லென முதிரினும்
எவருவப்பர் இரங்குந ரல்லால்
மகிழ்ச்சியின் வீங்கு மங்கையுங் காளையும்
இகழ்ச்சியே வீங்கி யேங்குவனராவர்
குறுந்தொடிச் சிறுமியர் கோலம்வே யாமையின்
எறும்பின் குழாங்களு மெழுகில சுருளும்
கொடுங்கோ னடாத்துங் கோமான் றன்கீழ்ப்
படுவன வெல்லாம் படுவன வுயிர்கள்
துறவெளிதாகுந் துயரமுந் தவிரும்
உறுதி கூறி யுளந்துணைப்பட்டில
தென்பு நீர் குடிப்பித் தென்பு முரிக்கினும்
பொன்பெற்றுங்குப் பொங்குவர் கள்வர்
மணஞ் செயுங் குளமே மடுவே முதல
பிணங்கள் செழுவலிற் பெருமுடை வீசும்
வஞ்சக்கனலும் வயிற்றுத் தணலும்
எஞ்சா தெழூஉ மேனைத்தழலொடு
வாழுஞ் செல்வர் மற்றும் வாழ
ஏழையர் மற்று மேழையராவர்
கடன்கொண்டாரெலாங் கவல்குளிப்பன்ன
கடன் தந்தாரெலாங் களிப்புக் குளிப்பர்

தங்கு திரைக்கால் தழூஉஞ் சேய்கண்டு
செங்கோலரசர் சிவந்து களைப்பர்
அன்பிற்பெற்ற வன்னையுமகற்றி
யென்கான் முளையலர் என்னவன் னெஞ்சள்
சூலுடை மடந்தை தோளொரு குழவியும்
பாலொரு குழவியும் பற்றிக் கணவனொடு
குண்டுநீரின்மை குதித்த கிணற்றுழிக்
கண்டு வெள்கிக் கண்ணீர் நிறைப்பள்
மானம் போர்த்த வாழ்புடைப் பெரியார்
தானஞ் செடுத்துந் தளர்வர்தஞ் சிறார்க்கு
உண்ண மதலைகள் உதைத்துப் புலம்பக்
கண்ணீர்காணு கவலும் புட்கள்
தேனினிதுண்டு தேன்களி பாடும்
வேனில் வேண்டுநர் வேண்டா வென்பர்
பெருக்கிய செலவுடைப் பெருஞ்செல்வரெல்லாம்
சுருக்கிச் சுருக்கித் தொலைப்பர் தம்வாணுள்
தாளைப் பிடிக்கினு நாளைவாவென்று
சூளைபோன் றுள்ளஞ் சூடுறுவார் சிலர்
கோலிய வெண்மைக் கோலங்கரப்ப
வாலிய வெண்டலை மல்கிய வெங்கணும்
கிள்ளப் பழுக்குங் கிளிவந்து கொஞ்சுங்
கொள்ளைத் தண்டலை குழைகில குழையும்
பிள்ளையுங் கிள்ளையும் பெருக்கிச் செருக்கும்
வள்ளல் மயங்க வெம்மருங்கு மயங்கும்
செங்கோலரசுபோல் தெறுகதிர் திங்களேல்
இங்குச் சிலவாழ்த லினிதாகு மென்பர்
இன்புதந்துரித்த வெருதுமுதல
துன்புகொண்டழூஉம் சுடச்சுட வெய்யோன்
பாலும் பழமும் படைத்த வங்காடி
தோலீ மென்புந் துவன்றிப் புலால் செயும்
யாற்றுளைப்பசி யாடுமேயினின்
ஆற்றருங் கொடுமை யளப்பரிதாகும்
இடங்கழியாள ரிலம்பெறு பாக்கெணிச்
சுடல் வேண்டா சான்றோர் துன்பப்படுவர்
பூத்த குடிமகளிர் பொழ்தின் மணம்பெறூர்
காத்த கொடியர்புன் கைக்கெளியராவர்
பல்ல கண்ணினர் பல்ல செவியினர்

பல்ல நாவினர் பாவலர் மழுங்குவர்
இன்னபெரிய விடுக்கணும் விளையும்
என்னினியறைகுவதியா மெடுத்தைய
மழை பெயல்வேண்டு மழை பெயல் வேண்டும்
மகப்பொருட்டானு மழை பெயல் வேண்டும்
தண்ணிய புனலொடு தண்ணிய பிறையும்
தண்ணிய கொன்றையுந் தண்ணருட்சடற்கு
நண்ணிய பெரும நம்ப
எண்ணினின்னின் வல்லுநரெவரே

மாகறல்-கார்த்திகேய முதலியார்.

---

## கந்தபுராண ஸாரம்.

### இருபானெண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

### உற்பத்திகாண்டம்.

உலகெலா முணர்வரிய முருகனிரு சரணமது வுன்னிவாழ் கச்சி யப்ப
னுபயதிரு வடிபணிந் தருள்வியா தற்சிட னேதுகந் தன்பு ராண
வுட்கிடை யெடுத்தன்பி னேதிரு மைப்பயனு மோங்கிமிக வாழு வாமா
லும்பர்புகழ் வெள்ளிமலை நம்பரனை யம்மைபெய ரொல்கவிம யக்கு மகளாய்

அலகிலன் பொடுதவ முஞற்றமுனி வர்க்கர னறிக்கவா கமமெய்ஞ் ஞான
மயன்கோ விலேகர்வரை யாய்புவிட மதனேகி யங்கம்வெந் தழிய யோகன்
றகன்றனையி னேன்புகண் டருமணங் கேட்டெவரு மாகவந் தருளின்முற்றி
யநங்க னையெழுப்பிவந் தமரவம ரர்க்காக வறுமுகங் கொண்டு பொறியாற்

சிலம்பாள் சிலம்புதிர வோடவளி துணையாற் செறிந்தபொறி சேர்த்த டத்திற்
சிறுவரறு வோராகி யறுவர்முலை யுண்டாடல் செய்பவிறை கூடு சிவையா
டிரட்டேது விற்கந்த னுகிச்சி லம்புவரு தேவிமார் மக்க டுணையாச்[ருவாய்
செறியவொரு * தகர்கொண் டயன்சிரங் குட்டியொருசிறைவைத்தகற்று கு

இலகுமிரு வல்லியர்க் கருளிவிபு தர்க்காக வெண்ணில்படை பெற்றெழுந்து
வெதிர்வரையு முரவரையு நீற்றவசுரேந்திர னிரங்கியே கிடவி லேகை
ரீர்ம்பொறை யிருந்துபுரி பூசிக்க வெண்ணிறல மேன்றசுர மீண்டு செந்தி
யெழுந்துவரலாறுகேட் டருள் †புதுச் சந்நிதிய வென்றனக் கருளை யளியே.

(க)

---

* தகர்=ஆடு. † யாழ்ப்பாணத்து உபயகதிர்காமம்.

## அசுரகாண்டம்.

சூரசைகவி சூழ்ச்சியிற் காசிப னுழைச்சென்று தயருறுத் தொத்தபுணர்விற்
சூரனரி யாம்பன்மா முகனுதி வெள்ளங்க டோற்றிடத் தாதை தவமே
சொல்லரிய வின்பமென் றறிமாணி சரிதையுஞ் சொல்லவனே வீரமகமே
துன்றுவள னென்றகல யாகம திபற்றியே தொல்வரம் பலவடைந்து
கரவிற்ப ளிங்குரை * புன் மதமண்ட கோசமுங் கற்றுவிச யத்தில் விசயங்
கண்டெதிர்கொள் பாட்டனொடு வந்தவனி துன்னவே கணர்துதிக் கரியுருக்ர
கதியர்நிலை கூறநகர் செய்துமுடி சூடிக் களீஇயரசு செய்து புலவோர்
காலாள ராகவரி பகைபாதி மூளையரைக் கடிதீன மோத்தை முகிகாற்
றூரசைவலன் வாதாவி தோன்றியுறு வர்க்குமை துறுநாளொர் சசியைவௌ
சூர்சூழ்ந்த துன்னியே யிந்திரன் மனேவேணு துன்றிவழி பட்டுலரவே [வச்
சொல்விந்த மலைவளர முனிவரன் காவிரியொ டுற்றுவரை சூள்வ மூங்கித்
தொட்டமுத் திப்பிலம் போய்க்கொன் றிருக்கவரி சொல்லிற் கவிழ்க்கந்தியும்
வரசைல மகள் கேள்வனைப்பணிய வேவல்செயும் வானவர் புலம்ப மருதன்
வண்கைலை யுறவுன்ன வயிராணி சோகிக்க வையனுட் காவலிற் போய்
வரமுனச முகிபிடித் தொருகைபற் றேங்கமுதல் வாணரைச் சிறைபு குத்தி
வருத்தின னெனக்கேட்ட புதுமையுறசந்நிதிய வந்தருள்வையின்றெனக்கே
(உ)

## மகேந்திர யுத்த காண்டங்கள்.

தோள்வீ ரனைத்தூது போக்கமா தனவரை சுழன்றமூங் தேறி யுததி
துள்ளியரி கொன்றிலங் கைவீழ்த்தி யதிபலற் றொலையநகர் சென்று கயனுங்
தொல்லுயிர் விடப்பட் டினத்தழகு கண்டரி சுதன்புலம்பக் கனவினிற்
றோன்றியருள் செய்தபின் றேற்றியவை புக்கெமது தோன்றலியல் கூறியுக்ர
ஆளரிய தெனவகன் றொருசத முகன்காவ லாளரை வதைத்து நகரை
யழித்தாயிரத்தோளர் வயிரவா கறுகுமுக னுதியர்க் கொன்று மீள
வந்நகர் புரிந்தமைச் சியல்கொண்டு சமர்செய்ய வாயத்த மாகவாகு
வவன்மொழிந் தனவருள வலைவாய் விடுத்தீழ மதனினே மத்த கூடந்
தாள்கொண்டிருப்பமன் வரவுமுனி கூறலுந் தநயனை விடுக்க முதனுட்
சமர்செய் தொளிக்கவிரு நாட்டந்தை வலிகெடத் தனயன்மூன் றினிலுமாகத்
தனிவாகு நகர்புக் கடர்த்திரணி யன்னேடு சருவமீ னுக வங்கித்
தனயன்மூ வாயிர ரறப்பகை சுடர்ப்பகை தனிப்புதல்வர் மாள வரியுங்
கோளிருங் குலிசம்விட் டொருசூரன் மாயையுங் கொன்றுமா மரமிரண்டு
கூறுப் பிளந்துமயில் சேவலாய் வரவூர்தி கொடியாக நாட்டி யமரர்
குதூகலித் திடவிரணியன் *கையறு நிலைசொலிக் கோவென் றிரங்க வலிமை
கொள்சிறை யகற்றியருள் சந்நிதிக் கந்தைய குற்றங்க ணீக்கி யருளே. (௩)

* புன்மதம்=மாயாவாதம்.

## தேவதக்ஷ காண்டங்கள்.

திருப்பரங் குன்றெழுந் தருளியனை யானையைத் திருமணங்கொண்டு குடியின்
சீரேற்றி வரைபுகுந் தமரப் புரந்தரன் சேர்துன் பறிந்து துறவிற்
சேரவெணி யாண்டளப் போனுலோ காயதத் தீநெறியின் மாற்ற வவணிற்
சிறக்கமுனை குருவடித் தொருகு ரனுவின்னல் சேர்தலென் செப்புமெனலுங்

கருப்பரங் குன்றவுப தேசமய னன்றுதக் கற்கருளி நோன்பு கருதக்
காட்டிட வவன்றவஞ் செய்தீச னருள்பெறீஇக் காணுபல மகவை யீன்று
கணிமருக னுமதி சபிக்கவது கங்கா தரக்கடவுள் காக்க வுமையாள்
கயிலைவிட் டருநதிப் பணிலமாய்க் குழவியாய்க் கடவுடவ மாய்ம ணக்கத்

தருக்குற் றகன்கயிலை தக்கனண வங்குளார் தார்தள்ள வெகுளி தள்ளத்
தந்தைமக மவிவிலக் கிச்சாலை செய்துவிதி தன்மகத் தெவரு மணுகச்
சங்கரற் கவிகொடா தாற்றத் ததீசிமுனி தான்றடுத் தவற்கு விடைக
டகவுரைத் தோம்ப சரிதைமால் சாபமுஞ் சாற்றவுந் தான மகமும்

விருப்புறச் சிவைநண்ண வேசவீ சன்பொரு வீரபத் திரனில் யாகம்
வீட்டியச் சிரஞ்சிறு விதிக்காக வடிமுடியை வேண்டிநே டிட்ட சரிதம்
விள்ளவர னற்பூசை யுற்றனன் கருவியிது குந்தனே விரதம் வேட்ப (௪)
வேண்டிய வடைத்தைகுற வள்ளிபுணர் சந்நிதிய வெளியனேனுய்யவிளையே

### முதனூலளவு.

### இன்னிசை வெண்பா.

புராணம்பன் மூன்றிலக்கம் போங்கிரந்த மத்து
விராதபொரு ளெங்குமிலை சங்கிதையா றைம்பதெனக்
காண்டமுண ரீசத்துக் காண்டமிரா றுண்முதலா
முண்டதமிழ்க் கந்தமதே யாம். (௫)

### செந்தமிழ்க் கந்தபுராணச் சிறப்பளவு.

### நேரிசை வெண்பா.

காண்டமா றேபடலங் காணூற்று நாற்பத்தொன்
றீண்டுபதி னுயிரமுந் நூற்றெண்ணைந்—தாண்டவா
றெண்பாத் தமிழ்க்கந்தக் கென்கசச்சி யப்பனுற்
றிண்பார் நிறைத்தானென் றே. (௬)

யாழ்ப்பாணம் - நா. கதிரைவேற் பிள்ளை.

---

* கையறுநிலையாவது கணவனோடு மனைவியர் கழிந்துழி அவர்கட்பட்ட அழிவு பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தி, தாம் இறந்துபடாதொழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறு நிலையாம். இதனை "கழிந்தோர் தேஎத்தழிபடருறீஇ—யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்" என்று ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் கூறியதனுனு முணர்க,

# ஜெய காந்தன்.

## முதல் அங்கம் - முதற்களம்.

இடம்:—காஸ்மீரநாடு, அரசியின் அந்தப்புரம் ; காலம்—மாலை.

(ரத்னுவதி தன் தோழி சகிதமாய் வீற்றிருத்தல்).

ரத்னுவதி :—குண்டலே !

குண்டலை :—அம்மணி.

ரத்னுவதி.—என் மனம் ஏதோ ஓர் வாருக இருக்கிறது, அதோ இருக்கும் வீணையை எடுத்துக்கொண்டுவா, தேவாரத்திலுள்ள சில பாடல்களைப் பாடிக்கொண்டிருப்போம்.

குண்டலை.—அப்படியே அம்மணி. (வீணையை எடுத்துவந்து கொடுக்க ரத்னுவதி அதைப் பெற்றுப்பாட ஆரம்பிக்கிருள்.)

திருச்சிற்றம்பலம்.

இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - திரிபுடை.

மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனி னிப்பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடிமுடி
நற்றவாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சி வாயவே.

கோணியபிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடிமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனை பிறப்பில்லியை
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனை படப்பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவை சொல்லுவார்க்கில்லைதுன்பமே

(சத்ருஜித் என்னும் அரசன் வருகிருர். ரத்னுவதி திடுக்கிட்டெழுந்திருக்கிருள்.)

சத்துருஜித்.—(ஓராசனத்தில் உட்கார்ந்து) பிரியே! இப்படி உட்காரு. (ரத்னுவதி உட்காருகிருள்.)

சத்துருஜித்.—காதலீ! உன்னுடைய வீணு கானத்தால் ஈஸ்வரனை தியானம் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் யான் வந்து அதற்கு இடையூறு செய்யலானேன். அதைப்பற்றி மன்னிப்பாயாக.

ரத்னுவதி:—பிராணநாதா! அதென்ன அப்படி சொல்லுகிறீர்களே. யானு தப்பை மன்னிப்பது, நன்ருயிருக்கிறது.

சத்ருஜி:—பெண்மணீ ! நீயோ ஈஸ்வர தியானம் செய்துகொண்டிருந்தனை. எப்போது நீ ஈஸ்வர தியானம் செய்யத்துணிந்தனையோ அப்

போதே நீஅப்பெரு வள்ளலாரது அருள் நோக்கத்திற்கு ஆளாயமர்ந்திருக்கும் அடியார்களில் ஒருத்தியாயினையே, அவ்வாறிருக்க யான் மன்னிப்பு கேட்கத்தகாதோ?

ரத்ந.—பிராணநாதா! அடியார்களுக்கு அவ்வளவு பெருமை யிருக்கின்றதோ?

சத்.—பெண்ணே, தடையென்ன?

"ஞாலமுண்டவன் தலைமிசை சுமப்பன் மெய்ஞ்ஞானிவேண்டுவவெலாம்
ஆலமுண்டவன் அவன்பின்னே திரிகுவன் அவனடித்துவட்கன்றே
சிலமன்னரும் மற்றுளத்தேவரும் திசைதிசை தொழுதேத்த [தோன்"
காலிரண்டையும் தலைமிசை வையெனக்கழறுவோன் கமலநான்முகத்

என்றபடி ஒருவன் உண்மையான அடியவனாயினால் பின் அவனை மாபலி சக்ரவர்த்தியினிமித்தம் இவ்வுலகை உண்ட திருமால் தனது சிரசில் வைத்துச் சுமக்கவும், அவனுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் அப்போதைக்கப்போது கொடுத்துவர ஆலகாலவிஷத்தையுண்ட சிவபெருமான் அவனுக்குப்பின் திரியவும், தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் அவனது பாதங்களைத் தன்சிரசின்மேல் வகிக்கவும், மற்றய தேவர்களும் முனிவர்களும் தேச மன்னர்களும் திசைதோறுஞ் சென்று அவனுடைய வரவை யெதிர்பார்த்திருக்கவுமன்றோ நேரும். அன்றியும் நம்முன்னோர்கள் எல்லாம் "அடியார்க்கடியே னாவேனோ" எனவும் "அடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய்" எனவும் "தொண்டரோ இறைவருள்ளத் தொடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" எனவும் அவ்வளவு சிலாக்கியப்படுத்திச் செப்பியிருக்கிறார்களென்றால் அவர்களுடைய பெருமைக்கும் ஓர் வரம்புமுண்டோ!

ரத்ந.—பிராணநாதா! இவ்வளவு பெருமை யெல்லாம் உண்மையான அடியவர்கட்குத் தானே.

சத்.—ஆம் கண்மணி, உண்மையான அடியவருக்கே தான்.

ரத்ந.—அவ்வாறாகில் தாங்கள் எப்படி என்னை அவர்களுடன் சேர்க்கலாம்?

சத்.—என் சேர்க்கப்படாது? பிறரால் ஏவப்பட்டு நீ ஈஸ்வரத்தியானஞ் செய்யவில்லை பார். அதில் ஊக்க மிருந்தன்றோ நீ பிரவேசித்தனை ஆகையால் உண்மையாக பக்தி செய்பவளே ஆவை.

ரத்ந.—பிராணநாதா! நமது குழந்தை ஜெயகாந்தன் இப்போது இங்கு வருவதாய்ச் சொல்லியனுப்பினான். காரணம் யாதோ தெரியவில்லை. தாங்கள் இன்று அவனைப் பார்த்தீர்களோ?

சத்.—பிரியே! யான் உன்னிடம் சொல்லவந்ததும் அவனைப் பற்றியே தான். யாம் இது காறும் அடியார் பெருமையைப்பற்றி வார்த்தையாடி யிருந்ததில் அதைச் சற்று மறந்தேன்.

ரத்ந.—பிராணநாதா? என்ன விசேஷம்.

சத்.—பெண்மணி, நாம் நமது ஜேயகாந்தனுக்குப் பேசியிருந்தோமே பெண்—.

ரத்ந.—ஆம், விதேக நாட்டரசன் புதல்வியாகிய சந்திர முகி.

சத்.—அவளிருந்த மாளிகையை கேரள நாட்டரசன் அர்த்தராத்திரியில் கொளுத்திவிட்டானாம்.

ரத்ந.—ஏன் அப்படி?

சத்.—அவ்வரசன் மிகவும் இளமைப்பருவம் உடையவன். தனக்கு அப்பெண்ணை விவாகம் செய்தளிக்கும்படி கேட்டானாம். அப்பெண்ணுக்குடையவன் கொடேனென்று மறுக்கவும் இவ்வாறு செய்தனனாம்.

ரத்ந.—அப்பெண் முதலானவர்கள் விழித்துக்கொண்டு அதனின்றும் தப்பித்துக்கொள்ளவில்லையாமோ!

சத்.—அதுதான் தெரியவில்லை. சற்று யோசித்து தப்பித்துக்கொண்டிருப்பார்களென்று யான் நினைக்கவில்லை. ஏனெனில் வேண்டுமென்று செய்தவர்கள் நாற்புறமும் ஏககாலத்தில் கொளுத்தியிருப்பார்களே யொழிய ஒருபக்க மாத்திகொளுத்தியிரார்கள். அப்படியிருந்தால் அதிலுள்ளவர்கள் தப்பித்துப்போவதற்கு எவ்வாறு இடங்கொடுக்கும்.

ரத்ந.—அப்பெண்ணினுடைய தந்தை யிருப்பாராகில் இவ்வண்ணம் நடக்குமா?

சத்.—என்ன! அவர் இருக்கும்போது அப்பயலுடைய தகப்பன் பட்டபாட்டையும் சொல்லப்போமோ? சதா நடுக்கந்தானே. அவர் இருந்தால் கேவலம் இவ்வளவு கொடூரமான செய்கைக்கு இடங்கொடுக்குமா?

ரத்ந.—நம் குமாரனுக்குத் தகுந்த நாயகி நாம் பார்த்த அளவில் அவள் ஒருத்தியே. ஆஹா! அவளுக்கு அழகும் குணமும் ஒருங்கேயன்றே பொருந்தியிருந்தது. வேறு அத்தகைய பெண் கிடைக்கப்போமோ நம் குமாரனுக்கு!

சத்.—பெண்ணே நாம் வருத்தப்படுவதால் ஆவது என்ன? இன்னானுக்கின்னபடி என்று எழுதியுள்ளபடி யல்லவோ முடியும்.

ரத்ந.—உண்மைதான் பிராணநாதா—பிராணநாதா! நாம் அப்பெண்ணைப் பேசி முடிவு செய்த பிறகு யான் எவ்வளவோ அகமகிழ்ச்சிகொண்டிருந்தேன்.

**சத்.**—ஆம் பிரியே. நீ மாத்திரந்தானு? யானும் இவ்வளவென்று வரையறுக்கப்படாத இன்ப சாகரத்தில்தான் மூழ்கியிருந்தேன். நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது. ஆனல் அதற்காக நாம் வருந்துவது எட்டுணையும் சரியல்ல.

**ரத்ந.**—என் பிராணநாதா நமது ஜெயகாந்தன் இதைக் கேட்டபிறகு எவ்வாறிருக்கிருன்? வருத்தமுடையவனுய்க் காண்கின்ருனு என்ன?

**சத்.**—கொலுமண்டபத்தில் வீற்றிருந்து ராஜாங்க விஷயங்களிற் கவனித்திருந்த அவன் முகம் இச்செய்தியைக் கேட்கவும் சந்திரனைக் கண்ட தாமரை மலர்போல் வாட்டங்கொண்டது. உடனே அவன் எழுந்து வேறு ஒன்றும் பேசாது தனது விடுதிக்குட் சென்ருன்.

**ரத்ந.**—பிராணநாதா! அவன் அப்பெண்ணைப் பார்த்தது கூடவில்லையே அப்படியிருக்க அவனுக்கு வருத்தம் உண்டாகவேண்டிய காரணம் என்ன?

**சத்.**—பெண்மணி, அவன் நேரில் பார்த்திராவிட்டாலும் அப்பெண்ணின் புகழை நம்மால் கேள்விப்பட்டிருக்கின்ருனல்லவா?

**ரத்ந.**—ஆம், இனி யார்தான் என்னசெய்யலாம். மிஞ்சிவிட்டது. (சற்றுப் பொறுத்து) இவ்வளவிலேயே நாம் விவாஹத்தை நிறைவேற்றியிருக்கலாம். நீங்கள் ஏதேதோ காரணங்கள் சொல்லி தாமதித்து வந்தீர்கள். அதன் பயன் இவ்வாருயிற்று.

**சத்.**—பிரியே! எதற்கும் காலம் வரவேண்டாமா "அடுத்து முயன்ருலும் ஆகுநாளன்றி யெடுத்த கருமங்களாகா" என்ற மூத்தோர் வாக்கியப்படி எதெது எந்தெந்த காலத்தில் எவ்வாறு முடியவேண்டுமோ அவ்வாறு முடியுமேயன்றி நம்முயற்சியினுல் ஒன்றும் ஆகா.

**ரத்ந.**—ஆம் பிராணநாதா, ஆம்! ஆம்! "வருந்தியழைத்தாலும் வாராதுவாரா, பொருந்துவன போமினென்ருற் போகா." உண்மையே.

**சத்.**—நாயகி! ஜெயகாந்தன் வருகிருன்போலிருக்கிறது.

(ஜெயகாந்தனும் சரசாங்கனும் பிரவேசித்தல்.)

**சத்.**—குழந்தாய் வா இப்படியுட்காரு. (ஜெயகாந்தன் உட்காருகின்ருன்.)

**ரத்ந.**—அப்பா நீ யேன் முகவாட்டங்கொண்டிருக்கவேணும்? எதற்காக? அப்பெண் இல்லாவிட்டால் ஆயிரம் பெண்கள் இருக்கிருர்கள்.

**சரசாங்கன்.**—அம்மம்மா ஒரு வார்த்தை

**ரத்ந.**—என்ன சொல்.

**சரசாங்கன்.**—இல்லையம்மா நான் ஒரு பெண்ணைக் கட்டிக்கொண்டு படுகிற துன்பத்தை இன்னதென்று சொல்லி முடியாதே. ஆனுலும் நீங்

கள் இந்த பிள்ளைக்கு ஒரேமட்டாய் ஆயிரம்பெண்களைக் கட்ட வேணுமென்று 8 சொல்லுகிறீர்களே. நன்ருயிருக்கிறது. வேறு எமன் வேண்டியதேயில்லை,

சத்.—அடா மூடாத்மா ! ஆயிரம் பெண்களையும் கட்டிக்கொள்ளுகிறதென் பது அர்த்தமல்ல. ஆயிரம் பெண்களில் நம்மனதுக்குகந்த ஓர் பெண்ணை வரிக்கிறது என்று ஆகும்.

சரசா.—ஓ அப்படியோ ஆனுல் சரிதான். இப்போது சரி; ஆயிரம் பெண்களை யும் கட்டினுல் ஆசாமி அன்றே பைசல்.

ஜெயகாந்தன்.—அம்மா யான் அப்பெண்ணை நேரில் பார்த்ததில்லையென்று லும் நீங்கள் சொன்னவற்றிலிருந்து அப்பெண் அதிக ரூபலாவண் யம் அமையப்பெற்றவள் என்றும் குணவதியென்றும் அறிந்து கொண்டேன் ஆகையால் எல்லாவித லக்ஷணங்களும் பொருந்தி யிருக்கின்ற அவள்போன்ற பெண் எனக்கு வேருெருத்தி கிடைப் பளோ! பிதா ! அதுமிக்க அருமையிலும் அருமை.

சத்.—ஆம் ! அதற்கு நாம் என்ன செய்யலாம்.

ரத்னு.—கிடைக்காமல் என்ன ? நீ அதிர்ஷ்டசாலியாக இருக்கும்பட்சத்தில் இதைப்பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமான நற்குணமும் ரூபலா வண்யமும் அமையப்பெற்ற பெண்கள் கிடைக்குமே.

சரசா.—அதுதான் இல்———. ஆஹா கிடைக்கும் கிடைக்கும்! பதின் மட ங்கா? ஆயிரமடங்கல்லவோ இவர் அதிர்ஷ்டத்துக்கு சொல் லவும் வேண்டுமா ? உள்ளதும் போய்விட்டதே,

சத்.—சரசாங்கா ! என்னேரமும் உனக்கு விளையாடுவதுதானு வேலை. எதற் கும் சமயமில்லையா ?

சரசா.—இல்லை மஹராஜா இளவரசர் வருந்துவதைப்பார்த்தால் எனக்கு மனம் தாளவில்லை. (ஜெயகாந்தனைப்பார்த்து) இளவரசே ! பயப் படவேண்டாம். இதற்கும் பதினுயிரம் பங்கு மேம்பட்டதை யான் கொண்டுவருகிறேன். ஆனுல் கொஞ்சம் யோசிக்கின்றேன்.

ரத்னு.—என்னடா யோசிக்கின்ருய் ?

சரசா.—மற்ருென்றுமில்லை. எங்கள் தந்தைக்குத் தந்தையிருந்தாரே அவர் இந்த தொழில் செய்துதான் ஜீவித்துவந்தாராம். நடுவில் எங்க ப்பா அதைவிட்டுப் போட்டிருந்தார். இப்போது அதை ஆரம் பிக்கலாமா வேண்டாமா என்றுதான் யோசனை. பெரிதல்ல நம் இளவரசருக்காக ஆரம்பிக்கிறேன்.

ஜெய.—அம்மா என் மனதை யான் எவ்வளவு தைரியப்படுத்தினுலும் நிலை க்கவில்லை. என்னசெய்வேன்.

சரசா.—"கிட்டாதாயின் வெட்டென மற" என்று மாத்திரம் பத்திருக்கிறீரே! அகப்படாவிட்டால் மறந்துவிடல்லவோ வேண்டும்.

ஜெய.—சீ துஷ்டா, என் முன்னில்லாதே.

சரசா.—"கீழோராயினும் தாழவுரை" அடுத்தவரி. (மெள்ளப்போய் விடுகிருன்.)

ஜெய.—அடே

ரத்ந.—குழந்தாய் அவனுடன் ஏன் கோபிக்கவேணும் அவனுக்கு சதா விளையாட்டுப் புத்திதான். ஜென்மத்தில் பிறந்தது போகுமா.

சரசா.—(திடீரென திரும்பிவந்து) அம்மா, "செருப்பாலடித்தாலும்" என்பதை விட்டுப்போட்டீர்களே.

(அனைவரும் நகைக்கிருர்கள்.)

சரசா.—அப்பா இப்போதுதான் என் மனம் நிம்மதிப்பட்டது. எமது இளவரசர் தாம் கொண்ட மனக்கிலேசத்தினின்றும் சிரித்தாரே.

ஜெய.—பிதா! அம்மாளிகையை யார் கொளுத்தியது கேள்விப்பட்டீர்களா?

சரசா.—ஐயையோ பழையபடியே அச்சிந்தனைவந்துவிட்டதே, சரி சரி. மஹாராஜா இப்போதே எனக்கு விடையளிக்க வேண்டுகிறேன். யான் சென்று லட்சக்கணக்காய் கொண்டுவருகிறேன். இனி தாளாதுபோல் இருக்கிறது.

சத்.—உஸ், பேசாமலிரு. (ஜெயகாந்தனைப்பார்த்து) குழந்தாய்! கேரளநாட்டரசன் புதல்வன் கொளுத்தினனும்.

ஜெய.—யார்! பிதா! கேரள நாட்டரசன் புதல்வனுகிய வீரகேசரியா?

சத்.—ஆம்.

ஜெய.—ஓ. அவன் எனக்கு நன்ருய்த் தெரியுமே. அவனுக்கு என்மேல் அத்தியந்தப் பிரீதியாயிற்றே. பிதா! அப்படியானல் எனக்கு விடையளிக்க வேண்டும் யான் சென்று நடந்த வர்த்தமானங்களையெல்லாம் தெரிந்து வருவதோடு அப்பெண் பிழைத் திருக்கிறதும் அல்லது அக்கினிக்கு இரையாய் விட்டதும் தெரிந்து வருகிறேன்.

ரத்ன.—குழந்தாய் ஜெயகாந்தா! நீ ஏன் போக வேண்டும்? வேவுகாரரையனுப்பித் தெரிந்துவரச் செய்யலாமே.

சத்.—ஜெயகாந்தா! கண்மணி! அது தான் எனக்கும் யுக்தமாய்த்தோற்றுகிறது.

(இன்னும் வரும்.)

தி. மே. முருகேச முதலியார்.

---

## சமாசாரக் குறிப்புகள்.

**சென்னை புது கவர்னர்** :—குடிகளுக்கும் மற்றவர்களுக்கு முண்டான குறைகளை மகாகனம் பொருந்திய கவர்னர் துரையவர்கள் பற்பல ஜில்லாக்களுக்கும் தாம் விஜயம் செய்யும்போது, கற்றறிந்தோர் மாத்திரமே வந்தனோபசார பத்திரிகை மூலமாய்த் தெரிவித்துக் கொள்வது வழக்கம். இவர்களே நேரில் சொல்லிக்கொள்வதற் கில்லாதபோது, பல விதங்களிலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சில்லறைக்குடிகள் தங்கள் கவர்னரைக் காண்பதும் அப்படிக் கண்ணுற் கண்டாலும் அவரையணுகி தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்வது அதனினும் அருமை. அஃதப்படியிருக்க, இப்போதிருக்கும் கவர்னர் துரையவர்களோ தாம் பற்பல ஜில்லாக்களுக்குப் போம்போது குடிகளைத் தாம் நேரில் தன்னருகில் வரவழைத்து அவர்களுடைய குறைகளைக் கேட்டுத் தேறுதல் சொல்லி தன்னால் கூடியவரையில் சகாயம் செய்வதாய் வாக்களித்து வந்திருக்கிறார். இவர் பச்சாதாபமுள்ளவ ரென்பது சொல்லாமலே தெரியவரும். இவர் குடிகளிடத்து வகித்திருக்கும் பக்ஷமும், நல்லெண்ணமும் இடையூறின்றி முழுதும் நிலைபெற்றிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். இவருடைய எண்ணம் நிறைவேறுவதற்குக் கடவுள் துணை புரிவாராக.

**புரோவின்ஷியல் கான்டிராக்டு** :—அதாவது பற்பல மாகாணங்களும் ஐந்து வருஷத்திற் கொருமுறை இந்தியா கவர்ன்மென்டோடு வருத்துச் செலவுகளைக் குறித்துச்செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு. சென்னை மாகாணத்து கான்டிராக்டும் வருகிற வருஷத்தோடு முடிவாகிறது. இவ்வுடன்படிக்கையினால் இவ்விராஜதானியில் வரக்கூடிய வரும்படியில் சிலபாகம் தான் இந்த கவர்ன்மென்டார் தங்களுடைய செலவுக்காக வைத்துக்கொள்ளலாம். மற்றவை யெல்லாம் இந்திய கவர்ன்மென்டாருக்குப் போய்ச் சேர்ந்துவிடல் வேண்டும். வரும்படி மார்க்கம் பல உண்டு. அவை நிலத்தீர்வை, நீர்த்தீர்வை, உப்புத்தீர்வை, வரும்படித்தீர்வை, ஸ்டாம்பு வரும்படி, காட்டு வரும்படி, றயில்வே வரும்படி முதலானவை. இந்திய கவர்ன்மென்டார் இவற்றிற் சிலவற்றைத் தாங்களே முழுதும் வைத்துக்கொண்டு சிலவற்றின் சில பாகத்தை சென்னை (மாகாண) கவர்ன்மென்டுக்கும் கொடுக்கிறார்கள். அதாவது நிலவரியில் கால்பாகம் கொடுத்து முக்காற்பாகம் தாங்கள்கொள்ளுகிறார்கள். சென்றவருஷம் அம்மாதிரியாகக் கொடுத்திருப்பது நிலவரியில் 140 லக்ஷம். நிலவரி மொத்தம் 560 லக்ஷத்தில் மீதி 420 லக்ஷமும் தாங்கள் கொள்கிறார்கள். இம்மாதிரியாய் பற்பல விதத்திலும் சென்னை கவர்மென்டுக்கு இந்தியா கவர்மெண்டார் கொடுப்பது 327 லக்ஷம் ரூபாய். சென்னை ராஜதானியின் செலவே சென்றவருஷம் சுமார் 332 லக்ஷம். வரவுக்குமிஞ்சியே செலவு 5 லக்ஷமாகிறது. இப்படி வரவு மிகக்கொஞ்சமாயிருந்தால் நடக்கவேண்டிய முக்கியமான வேலைகள் எப்படி நிறைவேறும். அதற்காகத்தான் இனி யேற்படும் உடன்படிக்கையிலாவது இந்த ராஜதானி தன் வரும்படியில் இன்னும் சற்று சாஸ்தியாய் அநுபவிக்க விடும்படி இந்தியா கவர்மெண்டாரைக்கேட்டுக்கொள்ளல் வேண்டும். அவர்களைக்கேட்பதுயார்? சென்னை கவர்ன்மென்டும் அவர்கள் மூலமாய்இவ்விராஜதானி ஜனங்களுக்குப் பிரதிநிதியா யிருக்கும் கனம் பொருந்திய லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில்

மெம்பர்களும்தான். மற்ற மாகாணங்க ளடைகிறபாகமும் இந்த ராஜதானி யடைகிறபாகமும் ஒற்றிட்டுப் பார்த்தால் நம்மாகாணம் தனக்குரிய பாகத்தையடையவில்லை யென்பது நன்ருய்த் தெரியவரும். நியாயத்தை எடுத்துக் காட்டி முறையிடுவார்களாகில் நலம் பிறக்கினும் பிறக்கும். முன்னிலும் அதிகமாகப் பெற்ருலொழிய குடிகளுக்குப் பிரயோசனமான வேலைக ளெடுத்து முடித்த லருமை.

**திராவிட பாஷா சங்கம்**:—இந்த சங்கம் பிறந்து சுமார் மூன்று வருஷ மாகிறது. இக்குழந்தையி னபிவிருத்தியைக் குறித்தும் இது வரையில் ஒன்றுங் கேட்டோமில்லை. பால் கொடுக்குந்தாய் அகப்படாவிட்டால் அக்குழந்தை வளர்வது எப்படி? நற்ருய் இக்குழந்தையின் கதியைப்பார்த்துப் பரிதபித்தும் யாது பயன்! இத்தனை வருஷமாயும் குழந்தை தவழ்கிறதென்ருயினும் நடக்கமுயல்கின்றதென்ருயினும் கேட்டோமில்லை. கிடந்த படுக்கையைவிட்டு எழவில்லைபோலும். அஃதுயிருடன் இன்னுமிருக்கின்றதோ என்று அயிர்க்கவேண்டி யிருக்கின்றது. இப்படி நினைக்கவும் வருத்தமாயிருக்கிறது. ஐயகோ! இக்குழந்தை எப்பொழுது படுக்கையினின்று தவழ்ந்து, நின்று, நடந்து, சிரித்து, மகிழ்ந்து, விளையாடுமோ! எப்போது நம்மை மகிழ்விக்கச் செய்யுமோ? அந்தநாள் எந்த நாளோ? நற்ருய் முன்னுக்கு வந்து குழந்தை க்ஷேமத்திற்குரிய செவிலித்தாயையும் பாலூட்டு தாயும்தேடிக் கண்டுபிடித்து குழந்தையை அவர்கள் வளரச்செய்வார்களென நம்புகிறோம். நற்ரு யின்னுரென்று நமக்குப் புலப்படவில்லை. ஒரு வேளை காலஞ்சென்ற சேஷாத்திரியாச் சாரியராயிருக்கும் பக்ஷத்தில் அவர் போய் விட்டபடியால் அவருடன் இக்குழந்தையு மிறந்துவிட்டதோ வென்று ஐயுறுவாராயினர் சிலர். அவர் நற்ருயல்லராயின்நற்ருயெவரோ தெரியவில்லை. அத்தகையர் முன்னுக்குவந்து வேண்டியவைகளைச் செய்து குழந்தைத் தோஷந்தாங்கியிருந்தால் அதைப் போக்கடித்து பாலூட்டுதாய்கண்டு பிடித்து நல்ல பாலூட்டிவளர்த்து எல்லோரும் இக்குழந்தை இளமைப்பருவமும் யவ்வனப்பருவமு மடையச் செய்வார்களாயின் இத்தகைய குழந்தையே மற்றவர்களுக்கும் மிகப்பிரயோசனமா யிருக்கும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடமாதிய பாஷைகள் அப்போதன்றே மிக்க மணம் வீசும். திராவிடர்களும் சுகந்த மடைந்து ஆனந்த முறலாம். நம்குழந்தையைப் பெற்றெடுத்த பெரியோர்காள்! வம்மின்! வந்துக் குழந்தையைக் காப்பாற்றி வளர்மின்!

**சென்னைராஜதானியின் ஜனத்தோகை**:—பத்து வருஷத்திற்கு முந்தி எடுத்த ஜன சங்கியையில் இவ்விராஜதானியில் குடியிருந்தவீடு சுமார் 67 லக்ஷம். இப்போது 71 லக்ஷம். அப்போதிருந்த ஜனத்தொகை 355 லக்ஷம் அல்லது சுமார் மூன்றரைகோடி. இப்போதோ 382 லக்ஷம் அல்லது சுமார் மூன்றே முக்காலே யரைக்கால் கோடி. பத்து வருஷத்தில் 26 லக்ஷம் ஜனம் அதிகமா யிருக்கிறது. அப்போதிருந்த ஆடவாரோ 176 லக்ஷம். இப்போதே 188 லக்ஷம். அப்போதிருந்த பெண்டுகளின் தொகையோ 180 லக்ஷம். இப்போதோ 193 லக்ஷம். பத்து வருஷத்தில் 13 லக்ஷம் பெண்டுகளதிகமா யுற்பவித்திருக்கிருர்கள். ஆடவரோ முன்னிலும் 12 லக்ஷமதிகமா யிருக்கிருர்கள். இப்போது ஆடவனைப்பார்க்கிலும் பெண்டுகள் (193—188) 5 லக்ஷமதிகமா யிருக்கிருர்கள். அதாவது 1000 பேர் ஆடவரிருந்தால் பெண்கள் 1026 பேரிருக்கிருர்கள். அப்போதிருந்த வீட்டைப்பார்க்கிலும் இப்போது (4,20,000) நாலுலக்ஷத்து இருபதினுயிரம் அதிகமாயிருக்கிறது.